Not for sale

மே - ஜூன் 2016

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## சகலமும் தேவனுடைய உயிரினங்கள்

தேவன் அவருடைய சிருஷ்டிப்புகளோடு கொண்டுள்ள தொடர்பு • மிருகங்கள் பாதுகாக்கப்படுதல் • வேதாகமத்தில் குதிரைகள் • வேதத்தில் சர்ப்பம் வேதாகமத்தில் நாய்கள் • பன்றிகளிடமிருந்து பாடங்கள் • எறும்பைக் கவனித்தல் இரண்டு சிங்கங்கள்

சகலமும் தேவனுடைய உயிரினங்கள்

# ஆதியிலே



மனுஷனும், மிருகமும் தங்களுடைய பரிபூரணமான இல்லத்தில் மகிழும்படியாக, தேவன் இந்தப் பூமியைச் சிருஷ்டித்தார். மிருகங்களுக்கு மட்டுமல்ல மனுஷருக்கும் தேவையான வகைவகையான உணவுகள் மற்றும் இயற்கையான இருப்பிடங்களைச் சிருஷ்டிப்பதில் தேவன் எதையும் விட்டு வைக்கவில்லை. "தேவன் ... பூமியை வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்தார்" (ஏசாயா 45:18).

"தேவனுடைய சிருஷ்டிப்புகளோடு அவருடைய உறவு" என்ற நம்முடைய முதல் கட்டுரை தேவனுக்கும் மனுஷனுக்குமுள்ள தொடர்புமட்டுமல்ல, தேவனுக்கும் மிருகங்களுக்குமுள்ள தொடர்பை விரிவாக உரைக்கிறது.

அனைத்து மிருகங்களும் போதுமான உணவோடு அந்தப் பேழைக்குள் எப்படி வாழ்ந்திருக்கக்கூடும் என்று, "மிருகங்கள் பாதுகாக்கப்படுதல்" என்ற கட்டுரை அலசி ஆராய்கிறது. வசனங்களோடு விஞ்ஞான உண்மைகளையும் தேவன் தமது சிருஷ்டிப்புகளின்மேல் கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது.

பண்டைய இஸ்ரயேல் மற்றும் எகிப்தில் குதிரைகள் எவ்வாறு சிறப்பான போர் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டது என்று, "வேதாகமத்தில் குதிரைகள்" என்ற கட்டுரையின் எழுத்தாளர் கூறுகிறார். தேவனைக் காட்டிலும் தங்களுடைய குதிரைகளின்மேல் நம்பிக்கைக்கொண்டிருந்த இஸ்ரயேலர்கள் மீண்டும் மீண்டுமாக எச்சரிக்கப்பட்டார்கள்.

ஏதேன் தோட்டத்தில் ஆதாம் விழுந்ததுமுதல், வெளிப்படுத்தலில் சாத்தானின் அழிவு வரையில், அந்தச் சர்ப்பம் வேதத்தின் பக்கங்களின் வழியாக தன்னுடைய பாதையை வகுத்தது. புனிதமான வார்த்தையின் பல வழிகளில் சர்ப்பம் பயன்படுத்தப்பட்டிருப்பதை, "வேதாகமத்தில் சர்ப்பம்" என்ற கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது.

வெளியேற்றப்படாமல் மனுஷனுடைய சிறந்த நண்பனாக மாறுவதற்கு, "வேதாகமத்தில் நாய்கள்" என்ற தலைப்பு, வேதாகமத்திலுள்ள பாடங்களை மனதில்கொண்டு, நாய்களின் வரலாற்றைத் தேடுகிறது.

"பன்றிகளிடமிருந்து பாடங்கள்" என்ற தலைப்பு பொதுவான பன்றியைப்பற்றிய பல்வேறு வசனப்பகுதிகளை ஆராய்கிறது. பன்றிகள் அசுத்தமாக இருப்பதற்கான காரணத்தையும், நியாயப்பிரமாணத்தின் கீழ் யூதர்கள் அதைப் புசிப்பதைத் தவிர்ப்பதற்கான காரணத்தையும் இது விவரிக்கிறது. பன்றிகளை பற்றிய அநேக குறிப்புகள் உவமானங்களாக வேதாகமத்தில் காணப்படுகிறது.

பண்டைய காலத்தில் ஒட்டகங்கள் சுமைசுமக்கிற சரிநிறைவான மிருகமாக இருந்ததின் காரணத்தைப் புரிந்துகொள்வதற்கு, "வேதாகமத்தில் ஒட்டகங்கள்" என்ற கட்டுரை சில ஆர்வமூட்டும் உண்மைகளைத் தருகிறது. ஊசியின் காதின் வழியாக, ஒட்டகம் உண்மையாக நுழைந்திருக்கக்கூடுமா?

கிறிஸ்தவர்கள் தங்களுடைய வேலையைச் செய்வதற்கு, "எறும்பைக் கவனித்தல்" என்ற தலைப்பு நமக்குச் சில நன்மையான ஆலோசனையைத் தருகிறது. "வாய்ப்புகள் கிடைக்கும்போது வேலைச் செய்யவும், ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளவும், தன்னலமற்று ஒருமைப்பாட்டோடு இருக்கவும்" போன்ற சில பாடங்களை இந்த ஆசிரியர் விஸ்தரிக்கிறார்.

"இரண்டு சிங்கங்கள்" என்ற நம்முடைய கடைசி கட்டுரை கெர்ஜிக்கிற சிங்கமாகிய சாத்தானுக்கும், யூதா கோத்திரத்து பாலசிங்கமாகிய நம்முடைய ஆண்டவராம் இயேசுவுக்குமுள்ள வேறுபாட்டைக் காண்பிக்கிறது, சாத்தான் நம்மைத் தாக்குவதை அறிந்து கொள்ளும்போது, நாம் எவ்வாறு விழிப்புணர்வோடு இருக்க வேண்டும்? நன்மை மற்றும் தீமை ஆகிய இரண்டையும் அடையாளப்படுத்துவதற்கு வேதாகமத்தில் சிங்கம் தேர்வு செய்யப்பட்டதன் காரணம் என்ன?

இந்தக் கேள்விகள் மற்றும் இன்னும் கூடுதலானவைகளுக்கு இந்தப் பகுதி பதிலளித்து விவாதிக்கிறது. இந்த அனைத்துக் கட்டுரைகளையும் வாசித்து மகிழ்வீர்கள் என்று நம்புகிறோம். மேலும் இவைகளைக் கடைப்பிடித்து ஆசீர்வாதங்களைப் பெற ஜெபிக்கிறோம்.

## மே- ஜூன் 2016


**தேவன் அவருடைய சிருஷ்டிப்புகளோடு கொண்டுள்ள தொடர்பு** 2
தேவன் அன்பாகவே இருக்கிறார்

**மிருகங்கள் பாதுகாக்கப்படுதல்** 7
பேழைக்குள் மீதமாய் இருந்த அறை

**வேதாகமத்தில் குதிரைகள்** 13
தேவனிடத்தில் மட்டுமே விசுவாசங்கொள்ளுதல்

**வேதத்தில் சர்ப்பம்** 17
பாவத்தின்மேல் வல்லமை

**வேதாகமத்தில் நாய்கள்** 22
குடிசையிலிருந்து கோபுரத்திற்கு

**பன்றிகளிடமிருந்து பாடங்கள்** 26
ஞானமாக சத்தியத்தை கையாளுதல்

**வேதாகமத்தில் ஒட்டகங்கள்** 33
ஊசியின் காதின் வழியாக

**எறும்பைக் கவனித்தல்** 33
சுறுசுறுப்பு மற்றும் ஒற்றுமை

**இரண்டு சிங்கங்கள்** 33
ஒரு விசுவாசி – ஒரு மோசடிக்காரன்

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 33
DNAமற்றும் மரபுவழி பண்பியல் ஒரு திருத்தம்

## தேவன் அன்பாகவே இருக்கிறார்

# தேவனுடைய சிருஷ்டிப்புகளின்மேல் அவர் கொண்டுள்ள தொடர்பு



"ஆறுநாள் உன் வேலையைச் செய்து, ஏழாம்நாளிலே உன் மாடும் உன் கழுதையும் இளைப்பாறவும், உன் அடிமைப்பெண்ணின் பிள்ளையும் அந்நியனும் இளைப்பாறவும் ஓய்ந்திருப்பாயாக"(யாத்திராகமம் 23:12).

Dave and Joanna Christiansen

மனுக்குலத்தோடு தேவன் கொண்டுள்ள தொடர்புக்கு வேதாகமத்தில் அதிகபட்சமான வசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. எக்காலத்திலும் வாழும் ஜனங்களை ஆசீர்வதிப்பதற்காகவும், இப்போது இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றக்கூடியவர்களுக்குக் கொடுக்கப்படும் ஒரு விசேஷித்த ஆசீர்வாதங்களுக்காகவும், தேவனுடைய திட்டத்தின் வழியாக அவருடைய அன்பு மிக அருமையாக வெளிப்படுத்தப்படுகிறது (1 யோவான் 2:1, 2; 1 தீமோத்தேயு 4:10; அப்போஸ்தலர் 24:15; ரோமர் 2:6-8). அண்ட சராசரத்தையும் சிருஷ்டித்த தேவன் தாழ்ந்த உயிரினங்கள்மேலும் அவர் கொண்டுள்ள அன்பையும், ஞானத்தையும் வசனங்கள் வெளிப்படுத்துகிறது. ஜலப்பிரளயத்தில், இந்த உயிரினங்களைக் காக்கும்படியாக தேவன், அவைகளைப் பேழைக்குள் அழைத்து, நோவா மற்றும் அவருடைய குடும்பத்தினருடைய பராமரிப்பில் விட்டார். இஸ்ரயேலுக்குக் கொடுத்தப் பிரமாணங்களின் வழியாகவும், இயேசு தம்முடைய உவமைகளைப் பயன்படுத்தின மாதிரிகளின் வழியாகவும் தேவன் தம்முடைய அன்பையும், இரக்கத்தையும் காண்பித்திருக்கிறார்.

### நியாயப்பிரமாணம்

"மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை? ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது" (மாற்கு 2:27). ஏழு நாட்களில் இந்த ஒருநாள், ஓய்வுக்கான நாளாக இருந்தது. அதின் ஜனங்கள் சொந்த பூமிக்குரிய தேவைகளுக்குமேலாக தேவனை உயர்த்த வேண்டியதாக இருந்தது. இதில் தேவனுடைய பரிசுத்தமான நாமத்தைத் துதிக்கவும், அவருடைய அன்பையும் நம்பத்தகுந்த தன்மையையும் புரிந்து பாராட்டுவதற்கான காலமாக இருப்பதை 92-ஆம் சங்கீதம் காட்டுகிறது. ஓய்வுநாளின் பிரமாணத்தைச் சற்று நெருங்கிப் பார்க்கும்பொழுது, இது மனுக்குலத்திற்கு மட்டுமல்ல, மிருகங்களுக்கும் இலாபகரமாய் இருப்பதைக் காட்டுகிறது. இந்த ஓய்வுநாள் பிரமாணம் இஸ்ரயேலுக்கு மட்டுமல்ல, அவர்களின் வேலைக்காரர்களுக்கும், அவர்கள் மத்தியிலிருக்கும் அந்நியர்களுக்கும், அவர்கள் மிருகங்களான எருது, கழுதை மற்றும் கால்நடைகளுக்கும், அவர்களிடம் வந்த விருந்தாளிகள் மற்றும் தங்களுடைய தேசத்திலிருக்கும் அந்நியர்களின் கால்நடைகளுக்கும் கொடுக்கப்பட்டதாக யாத்திராகமம் 23:12 மற்றும் உபாகமம் 5:12-14-ஆம் வசனங்கள் காண்பிக்கிறது. ஏழை ஜனங்களும், வயலில் மிருகங்களும் புசிப்பதற்காக நிலம் ஓய்ந்திருந்தபோது, இது ஓய்வு வருடமாகவும் நீடித்தது யாத்திராகமம் (23:10, 11).

மிருகங்கள் சரிசமமாக நிலத்தை உழவேண்டுமென்று உபாகமம் 22:10-ஆம் வசனம் கூறுகிறது. ஒரு மாட்டையும், கழுதையையும் ஒருமித்து ஏர்பூட்டுவது இரண்டிற்கும் கேடுண்டாக்கும். ஒரு மிருகம் நலமாகவும், மெதுவாகவும் மற்றொன்று பலமாக இராவிட்டாலும் வேகமாக இழுப்பதினால் அவைகளின்மேல் வைக்கப்படும் நுகத்தடி சமமாகப் பொருந்தாது. அதாவது விசுவாசிகளும் அவிசுவாசிகளும் வெவ்வேறு திசைகள் என்பதினால், ஒரே நிலத்தை அடைவதற்கான முயற்சியில் இவர்கள் ஒருமித்து செயல்பட முடியாததினால் விசுவாசிகள், அவிசுவாசிகளோடு சமமாகப் பிணைக்கப்படக்கூடாது என்று அப்போஸ்தலனாகிய பவுல் இந்தக் கோட்பாட்டை 2 கொரிந்தியர் 6:14-18 வசனங்களில் எளிமையான பயன்பாட்டிற்குக் கொண்டுவந்தார்.

போரடிக்கும் மாட்டை வாய் கட்டாயாக என்று உபாகமம் 25:4-ஆம் வசனம் கூறுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இந்தக் கோட்பாட்டின் முழுமையான அர்த்தத்தை 1 தீமோத்தேயு 5:18-ஆம் வசனத்தில், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாய் எண்ணப்பட வேண்டுமென்று கூறி மூப்பர்களுக்குப் பொருத்துகிறார். ஆண்டவருக்கு உற்சாகமாக ஊழியஞ்செய்பவர்களை, நாம் பாராட்ட வேண்டுமென்று அப்போஸ்தலனுடைய இந்தப் பயன்பாட்டில் குறிப்பிடுகிறார். பிறருக்காக ஜெபிக்கும் ஊழியத்தில் துவங்கி பல்வேறு ஊழியங்களைச் செய்ய இவர்களுடைய எடுத்துக்காட்டை நாம் பின்பற்ற வேண்டியதாக உள்ளது (எபிரெயர் 10:32-36; 1 தெசலோனிக்கேயர் 5:25). இது ஒரு முக்கியமான பயன்பாடாகும். தாழ்ந்த மிருக ஜீவன்களுக்கும் தேவன் கொண்டுள்ள அக்கறையை நியாயப் பிரமாணமும் காட்டியது,

இயேசு ஓய்வுநாளில் ஜனங்களைச் சொஸ்தமாக்கினபோது, பரிசேயர்கள் அவருடைய வார்த்தைகளில் அவரைக் குற்றங்கண்டுபிடிக்க

வகைத்தேடினார்கள். ஓய்வுநாளிலும் தன் மிருகங்களைத் தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டுபோய் அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில் லையா? அல்லது துறவிலே விழுந்த மிருகத்தை உடனே தூக்கிவிடாமலிருப்பாரோ? என்று இயேசு அவர்களுக்கு நினைப்பூட்டினார் (லூக்கா 13:15, 14:5). ஒரு மிருகம் தொலைந்துப் போயிருந்தாலும் அல்லது பாரமான சுமையினால் அது தடுமாறினாலும் மற்ற இஸ்ரயேலர்கள் அந்த மிருகத்திற்கு உதவி செய்ய வேண்டும். அது எதிராளியின் மிருகமாக இருந்தாலும் அதற்கு உதவி செய்ய வேண்டும் (யாத்திராகமம் 23:4, 5). தேவன் தம்முடைய மிருக சிருஷ்டிப்புகளின்மேல் அக்கறை கொண்டிருப்பது தெளிவாகிறது. இந்த உலகத்தின் மனுக்குலத்தின்மேல் இன்னும் அதிகமான அக்கறை கொண்டிருக்கிறார். அவருடைய புது சிருஷ்டிகளுக்கு ஆழமானப் பாடங்களை எடுத்துக்காட்டுவதற்கு இந்த மிருகங்களையும் தேவன் பயன்படுத்தியிருக்கிறார்.

## கிறிஸ்தவர்களுக்கான ஆழமானப் பாடங்கள்

**ஒரு மேய்ப்பராகிய இயேசு** -- 100 ஆடுகளைக்கொண்ட ஒரு மேய்ப்பர், 99 ஆடுகளையும் வனாந்தரத்தில் விட்டு காணாமற்போன ஓர் ஆட்டைத் தேடினார் என்று இயேசு கூறினார் (மத்தேயு 18:12; லூக்கா 15:4-6). இது அவருடைய ஆழ்ந்த சிந்தனை மற்றும் அக்கறையையும், அவருடைய ஆடுகளைப் பெயர் சொல்லி அழைத்தார் என்ற உண்மையையும் மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறது (யோவான் 10:3, 27). ஒரு பாவி மனந்திரும்பியதைக்குறித்து, பரலோகத்தில் மிகுந்த மகிழ்ச்சியுண்டாயிருந்தது. சபை அவருடைய சரீரம், அவருடைய மணவாட்டி, அவருடைய ஆடுகளின்மேல் அவர் கொண்டுள்ள அன்பு மற்றும் அக்கறைக்கு இது ஓர் அழகான சித்திரமாகும்.

இயேசு நமக்காக தம்முடைய ஜீவனைக் கொடுத்து நாம் செல்ல வேண்டிய வழியை நமக்குக் காண்பித்தார் மற்றும் நாம் நம்முடைய சகோதரர்களுக்காக நம்முடைய ஜீவனை இழக்க வேண்டும் என்பதையும் காண்பித்தார் (1 யோவான் 3:16). ஒருவர்மேல் ஒருவர் அன்பு செலுத்த வேண்டுமென்ற பிரமாணத்தைப் பெற்றுள்ளோம். இதினிமித்தமாக நாம் அவருடைய சீஷர்கள் என்று அழைக்கப்படுகிறோம் (யோவான் 10:3-5, 15:10-14, 13:34, 35). இயேசுவின் ஆடுகளைப் பராமரிக்கும்படி பேதுருவிடம் கேட்டுக்கொள்ளப்பட்டதுபோல, நாமும் அதையே செய்ய வேண்டும் (யோவான் 21:15-17).

"அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28). நம்முடைய சிறந்த நிச்சயமான நலனுக்கு ஏற்றவைகளாக கூடாதகாரியங்களை தேவன் என்றுமே அனுமதிப்பதில்லை. அவர் செய்யுமளவுக்கு அவருடைய ஞானம் குறைவானதுமல்ல. அவருடைய வார்த்தைகளைப் படித்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவரைப் பின்பற்றுவதினால் அவருடைய சட்டத்தை அறிந்துகொள்ளக்கூடிய இந்தப் பரிவுமிக்க அன்பைப் பெற நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**மற்ற பாடங்கள்** — சிறிய பறவைகளையும் தேவன் பராமரித்துப் போஷிக்கிறார் (மத்தேயு 10:29-31; லூக்கா 12:6). இதைக் காட்டிலும் நம்முடைய சகல தேவைகளையும் நிறைவாக்கும்படிக்கு தேவன் நமக்கு உறுதியளிக்கிறார் (மத்தேயு 6:26). ஆகவே நம்முடைய தேவைக்கு அதிகமானவைகளை நாம் தேடக்கூடாது. நம்முடைய மாம்சத்தின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு விரும்பி தேவனுடைய பரிபூரண சித்தம் செய்யாமல், நம்முடைய ஜெபங்களுக்குப் பதில் அளிக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், நமக்கு நன்மையல்லாத காரியங்களை தடைசெய்வதற்கு அவர் மிகுந்த ஞானமுள்ள தேவனாக இருக்கிறார் (யாக்கோபு 1:5-8, 4:3).

மிருகங்களிடம் நாம் கனிவோடு இருக்க வேண்டுமென்று தேவன் விரும்பினாலும், மிருகங்களைக் காட்டிலும் மனிதர்கள் எப்போதும் மேலானவர்கள் என்று அவர் வலியுறுத்துகிறார் (மத்தேயு 6:26; 2 பேதுரு 2:12; யூதா 1:10). பழைய ஏற்பாட்டின் பலிகளில் நரபலிகள் எங்கும் செலுத்தப்படக்கூடாது.

## தொகுப்பு:

எவ்வளவு ஞானம் மற்றும் அன்பான தேவனை நாம் பெற்றிருக்கிறோம்! அவர் தம்முடைய சகல சிருஷ்டிகளையும் பார்த்து அவைகளனைத்தும் நல்லது என்று கண்டார் (ஆதியாகமம் 1:31). அவருடைய சிருஷ்டிப்புகளைப் பராமரிக்க அவர் எல்லா முன்னேற்பாடுகளையும் செய்தார். மேலும் அவர்களின் சந்தோஷத்தைப் பாதுகாக்க சட்டங்களை ஏற்படுத்தினார். அவர் ஒருவரிடம் ஒருவர் அன்புகூரும்படி மட்டுமல்ல, மிருகங்களிடமும் அன்புகூரும்படி கூறினார். நமக்காக அவர் கொண்டிருக்கும் அன்பை நாம் புரிந்துகொள்வதற்கு அவர் மிருகங்களைப் பயன்படுத்தினார். நம்முடைய சகல தேவைகளையும் சந்திப்பதற்கு உறுதியளிக்கும்படியாக நமக்காக ஒரு பெரிய மேய்ப்பரை தேவன் கொடுத்தார்.

அவருடைய அன்பிற்கும் அவருடைய சிருஷ்டிப்புகளுக்காக அவர் செய்திருக்கும் ஏற்பாடுகளுக்கும் நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்! நம்முடைய மகத்துவமான தேவனிடம் விசுவாசத்தோடும், நம்முடைய முழு இருதயத்தோடும் அவரை நேசித்து, மகிழ்ச்சியுள்ள இருதயங்களோடும் நிச்சயமாக அவருக்கு ஊழியஞ்செய்வதற்கு எப்பேர்பட்ட தூண்டுதலைப் பெற்றுள்ளோம்.

**பேழைக்குள் மீதமாயிருந்த அறை**

# மிருகங்கள் பாதுகாக்கப்படுதல்



James Parkinson

"நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் சந்ததியோடும், உங்களோடே பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள்முதல் இனிப் பூமியில் உண்டாகப்போகிற சகல ஜீவஜந்துக்கள் பரியந்தம், பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற பூமியிலுள்ள சகல காட்டு மிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்" (ஆதியாகமம் 9:9-10).

சகலவிதமான ஜீவன்களைப் பாதுகாப்பதற்கு ஒரு பேழையைக் கட்டும்படி நோவாவுக்குக் கட்டளைக் கொடுக்கப்பட்டது. "இந்தத் தீமையான உலகமும்" தன்னைத்தான் அழித்துக்கொள்ளும் வரையில் மனுக்குலம் உயிர்ப்பிழைத்திருப்பார்கள் என்று உறுதியளிக்கும்படியாகவும் இது பதிவு செய்யப்பட்டுள்ளது.

நோவாவின் பேழை 300 x 50 x 30 முழம் அளவுகளையும் மற்றும் மூன்று தட்டுகளையும் கொண்டிருந்தது (ஆதியாகமம் 6:15-16). கூண்டுகளும், தொங்கும் கூடுகளையும் கணக்கிடுவதற்கு முன் அதிலுள்ள மூன்று தட்டுகளும் ஏறக்குறைய 130,000 சதுரடி பரப்பளவைக் கொண்டிருந்தது. (ஸ்மித்ஸ் [Smyth's] அளவின்படி கிட்டத்தட்ட 200,000 சதுரடிகள்).

முன்னதாகவே பதிவுகளில் காணப்பட்டபடி ஒரு மில்லியனுக்குமேலான உயிரினங்களுக்குப் போதுமான இடம் இருந்திருக்க வாய்ப்பில்லை என்று சிலர் வாதிக்கலாம் (இன்னும் கண்டுபிக்கப்படாத ஐந்து மில்லியன் உயிரினங்கள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது). ஆயினும் 80% பூச்சி வகைகளேயாகும். (இரு யானைகளின் முதுகில் நிறைய ஈக்களைக் கட்டி வைக்கக்கூடும் என்பதை டாக்டர் ஹேரி ரிம்மர் கவனித்தார்). ஒரு மில்லியன் பூச்சி வகைகள் உள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதுவரை அறியப்படாத வகைகளும் உள்ளன. மீதமுள்ள இனங்களுள், பெரும்பான்மையான இனங்கள் தண்ணீரில் வாழ்பவை. எனவே அவைகளுக்குப் பேழை அவசியம் இல்லை.

நிலத்தில் வாழும் பாலூட்டிகளுக்கே பேழையில் இடம் தேவைப்பட்டது. 5,501 வகையான பாலூட்டிகள் ஏற்கெனவே விவரிக்கப்பட்டுள்ளது. இன்னும் நூறு வகைகள் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கலாம் (இவற்றுள் 100-125 வகைகள் நீரில் வாழ்பவைகளாகும்). 290 இனங்கள் ஒரு செம்மறியைவிட சிறியதாகவும் 757 இனங்கள் செம்மறிக்கும், எலிக்கும் இடையிலான உருவளவைக் கொண்டதாகவும் மற்றும் 1,359 எலியைவிட சிறியதாகவும், சராசரியான ஒரு பூனையின் உருவளவே உள்ளன என்று டாக்டர் ரிம்மர் பல ஆண்டுகளுக்கு முன் குறிப்பிட்டார் (கண்டுபிடிக்கப்படாத பெரும்பாலான இனங்கள் சிறிய உருவளவு கொண்டதாகவே இருக்க வேண்டும்). 5,500 வகை நில பாலூட்டிகளைப் பேழையில் அனுமதித்தால், ஒரு இனத்திற்கு சுமார் 24 சதுரடி மீந்திருக்கும். இந்த இடம் பூனையின் உருவளவு கொண்ட இரு ஜோடிகள் உறங்குவதற்குத் தாராளமாக இருந்திருக்கும்.

ஒவ்வொரு தளத்தில் உச்சவரம்பு 15-20 அடி உயரத்தில் இருந்திருக்க வேண்டும். அப்படி இருக்கையில் பறவைகள் பறக்க தாராளமான இடம் இருந்திருக்கும். சிறிய விலங்குகள் மற்றும் பறவைகளின் கூடுகளை குவியலிடுவது ஒரு வருடத்திற்குத் தேவையான உணவை வைக்கப் போதுமான இடம் இருந்தது. ஆழ்ந்த உறக்கத்திற்குச் செல்லும் கரடிகளுக்கு மிகக் குறைந்த உணவு தேவைப்பட்டிருக்கும் (ஆதியாகமம் 6:21).

காட்டு விலங்குகள் துயரத்தில் இருக்கும்போது மனிதனை தன் புகலிடமாகக் கருதும் (ஆதியாகமம் 6:20). பயந்திருக்கும் மிருகங்கள் உண்ணாது. அதனால் எல்லா விலங்குகளும் பாதுகாப்பாக பேழைக்குள் வந்து சேரும் (மால்டா தீவின் குகைகளில், விலங்குகள் மற்றும் அவைகளின் இறைகளும் இணைந்த புதைப்படிவங்கள் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. ஒருவேளை அவைகள் அந்த வெள்ளப் பெருக்கிலிருந்து பிழைத்துக்கொள்ள வீணாக முயற்சி எடுத்திருக்கலாம்).

பூமியதிர்ச்சியாகவோ அல்லது ஆழ் கடலின் எரிமலையாகவோ உருவாக்கப்பட்டிருக்கலாம்.

ஒருக்காலும் அமெரிக்காவில் நிலத்திற்குரிய உயிரினங்கள் சற்று குறைவான தரம் வாய்ந்த உயிரினங்களாக மாற்றப்பட்டதாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டாக்டர் ஷெல்லி கூறுகிறார் (வெள்ளத்தின்போது இவை மாறியிருக்கலாம்). ஒரு ஜோடிகள் சுத்தமான விலங்குகள் மற்றும் பறவைகள் (உண்பதற்கு நலமானது, பலி செலுத்த உத்தமமானது) பேழைக்குள் எடுத்துச் செல்லப்பட்டது. ஆனால் அசுத்தமான விலங்குகளில் இரண்டு ஜோடிகள் மட்டுமே பேழைக்குள் எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வாறு விலங்குகளைத் தெரிந்தெடுத்ததினால் பல இனங்களின் மரபு பாதுகாக்கப்பட்டது.

## எத்தனை இனங்கள் ?

| இனங்கள் | அதிகபட்ச அளவீடு | கண்டுபிடிக்கப்பட்டவைகள் | அதிகபட்ச அளவீடு |
|---|---|---|---|
| பலூட்டும் விலங்கினம் | 5,600 | 5501 | 0.091233 |
| பறவைகள் | 10,500 | 10,064 | 0.711063 |
| ஊர்ந்து செல்லும் பிராணி | 12,000 | 9,547 | 0.195500 |
| நிலநீர் வாழ் உயிரினம் | 15,000 | 6,771 | 0.244375 |
| கடல்வாழ் மீன் வகை | 45,000 | 32,400 | 0.733126 |
| நண்டு வகைகள் | 1,50,000 | 47,000 | 2.443753 |
| நத்தை வகைகள் | 3,00,000 | 85,000 | 4.887506 |
| சிவந்தி வகைகள் | 600,000 | 1,02,240 | 9.775012 |
| பூச்சி இனங்கள் | 5,000,000 | 1,000,000 | 81.45843 |
| **Total** | 6,138,100 | 1,298,523 | 100.000 |

ஒவ்வொரு மிருகத்திற்கும் சராசரி ஒரு நிமிடம் என்று எடுத்துக்கொண்டால், (மூஞ்சுறு போன்ற மிருகங்களுக்கு நிறைய, சிலவற்றிற்குக் குறைவு) 5,500 வகை இனத்திற்கு எட்டு நபர்கள் சராசரியாக ஒரு நாளுக்கு 11½ மணி நேரம் உழைத்திருக்க வேண்டும். ஓய்வுநாள் அநுசரிக்க வேண்டிய கட்டளை இல்லாததால், அவர்கள் ஒரு வாரம் முழுவதும் உழைத்திருக்க வேண்டும். இவை அனைத்தும் செயல்முறை படுத்தக்கூடிய ஒன்றாக இருந்தாலும், அதனை ஆய்வு செய்கையில் உணவு மற்றும் தண்ணீர் பங்கீடு செய்வதற்கும் அதனைச் சுத்தம் செய்வதற்கும் வசதியாக பேழை கட்டுதல் திட்டமிடப்பட்டிருக்கும்,

### ஏன் இந்த வெள்ளப்பெருக்கு ?

"அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றென்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார். தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. (ஆதியாகமம் 6:3, 6). விழுந்துபோன தூதர்களின் சந்ததி, தங்கள் உரிமைகளை ஆதாமிடமிருந்து அல்லது மாறாக தங்கள் தந்தையிடமிருந்துப் பெற்றுக் கொண்டார்கள். ஆதலால் அவர்களை அழிப்பது தேவையானதொன்றாக இருந்தது. அதனால் தேவன் வெள்ளப் பெருக்கை அனுப்பினார்.

### எதனால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது?

"மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந்தன; வானத்தின் மதகுகளும் திறவுண்டன. நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேல் பெருமழை பெய்தது" (ஆதியாகமம் 7:11-12) என்று வாசிக்கிறோம். "வானத்தின் மதகுகள் திறவுண்டன" என்றால் மழை பொழியத் துவங்கியவுடன் மேகங்கள் உடைக்கப்பட்டது. ஆழங்களின் ஊற்று, பரலோகத்திற்கு உடன்பாடாக கூறப்படுகிறது. அது சமுத்திரங்களைக்குறிக்கும் என்று 2 பேதுரு 3:5-6-இல் உறுதி செய்வதுபோல அது ஒரு பெரிய சுனாமியாகக்கூட இருக்கலாம். அது கடலைத் தாக்கிய எரிநட்சத்திரமாகவோ அல்லது

இவையனைத்தும் உறுதி செய்யப்பட வேண்டியவைகள்.

ஒருவேளை அந்தப் பேழை ஓர் ஏற்ற இடத்தில் மிதந்துக்கொண்டிருந்திருக்கலாம். தெற்கிலுள்ள அரராத் மலை மற்றும் வடக்கிலுள்ள Caucasus மலையின் நடுவில் மிதந்திருந்தால், தெற்கு மற்றும் வடக்கு திசைகளிலிருந்து வரும் பேரலைகளிலிருந்து பாதுகாக்கப்பட்டிருக்கும். இதற்கிடையில் குரா (Kura) ஆற்றின் பள்ளத்தாக்கு, காஸ்பியன் கடலில் கிழக்கிலிருந்து அல்லது கறுப்பு கடலின் வடக்கிலிருந்து சுமார் 250 மைல் தூரமே உள்ளது. ஆகையால் அந்த மலைகள் விரைந்து வற்றிப்போகவும், அந்த எட்டுப் பேர் பேழையிலிருந்து வெளியே வருவதற்கான நேரம் மிகவும் குறைந்ததாக இருக்கும்.

மலைகளில் உச்சி தெரிய ஆரம்பித்தவுடன் நீண்ட தூரம் பறக்கும் — அண்டங்காக்கையை வெளியே அனுப்பினார். பிறகு குறைந்த தூரம் பறக்கும் — ஒரு புறாவை அனுப்பினார். அது இரண்டாம் முறை வெளியே அனுப்பப்பட்டபோது, "ஒரு புதிதான ஒலிவ இலையை" எடுத்து வந்தது. பல வாரங்கள் சென்ற பின் அவர்கள் பேழையைவிட்டு வெளியே வந்து தேவனின் உடன்படிக்கையான வானவில்லைக் கண்டனர்.

**நமக்குரிய பாடம்:**

எவ்வாறு தேவனுக்கும், நோவாவுக்கும் விலங்குகள் மீது பரிவு இருந்ததோ, அதுபோல கிறிஸ்துவும் மற்றும் அவருடைய சபையும் மனிதனையும் மற்றும் விலங்குகளையும் அர்மெகதோன் யுத்தத்திலிருந்து கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு அழைத்து வருவார்கள்.

# வேதாகமத்தில் குதிரைகள்



Brent Hislop

"சிலர் இரதங்களைக்குறித்தும், சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள்; நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக்குறித்தே மேன்மைபாராட்டுவோம்" (சங்கீதம் 20:7).

வேதாகமத்தில் குதிரைகளைப்பற்றி குறிப்பிடத்தக்க காரியம் என்னவெனில், இவை மனுஷருடைய சமாதானமான நலனுக்காகப் பயன்படுத்தப்படாமல், பெரும்பாலும் அரிதான போர் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டதாகப் பேசப்படுகிறது.

பார்வோனால் சாராளுக்கு, ஆபிராமிடம் கொடுக்கப்பட்ட அனைத்து பரிசுகளிலும் குதிரைகளைப் பற்றியல்ல, ஒட்டகங்கள் மற்றும் கழுதைகளைப்பற்றி மட்டுமே ஆதியாகமம் 12-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது, இது கவனிக்கப்படத்தக்கது. முக்கியமாக குதிரைகள் போர் இரதங்களாகப் பயன்படுத்தப்படுவதினால், அவைகள் பரிவர்த்தனையில் ஒரு பகுதியாக இருக்கவில்லை என்று பொதுவாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. ஆகவே சமாதானத்துக்குரிய மனுஷனாகிய ஆபிராமுக்குப் பொருத்தமாக இருக்காது. முற்பிதாக்களின் சொத்துக்களில் குதிரைகள் காணப்படுகிறதில்லை. எடுத்துக்காட்டாக, ஆதியாகமம் 24:35 மற்றும் ஆதியாகமம் 30:43. இங்கு ஒட்டகங்களும், கழுதைகளும் பொதி சுமக்கும் மிருகங்களாகப் பயன்படுத்தப்பட்டதாகக் காணப்படுகிறது.

ஆதியாகமம் 50-ஆம் அதிகாரத்தில் யாக்கோபின் மரணத்தைப்பற்றி விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. யாக்கோபின் மரணத்திற்காக எகிப்தியர்களும் எழுபது நாள் துக்கம் கொண்டாடி, கோசேனிலிருந்து கல்லறை இருந்த கானான் வரைக்கும் திரளான ஜனங்கள் இரதங்களோடும், குதிரை வீரர்களோடும் அரசு மரியாதையோடு ஊர்வலம் சென்றனர்.

யாத்திராகமம் 14-ஆம் அதிகாரத்தில், யாக்கோபின் மரணத்திற்கு 198 வருடங்களுக்குப் பின் யாக்கோபின் சந்ததி மீண்டும் எகிப்திலிருந்து வழி துணையோடு அனுப்பப்பட்டார்கள். ஆயினும், இந்த முறை பார்வோன் அவனுடைய குதிரைகள், இரதங்கள் மற்றும் குதிரை வீரர்களால் பின் தொடரப்பட்ட ஒரு வித்தியாசமான சூழ்நிலை காணப்பட்டது. தேவன் எகிப்தின் சேனையை அழித்து அற்புதமான மீட்பை ஏற்படுத்தின காரியம், மோசே பாடின முதல் பாடலில் காணலாம். வீட்டுக்காக மனுஷரையோ, குதிரைகளையோ நம்புவதைக் காட்டிலும் தேவன் பேரில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதற்காகவே யாத்திராகமம் 15:1-18 வசனங்கள் ஒரு மாறாத சொல்லாக நிலைப்பெற்றது. "அப்பொழுது மோசேயும் இஸ்ரயேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்துபாடின பாட்டு: கர்த்தரைப் பாடுவேன்; அவர் மகிமையாய் வெற்றிசிறந்தார்; குதிரையும் குதிரைவீரனையும் கடலிலே தள்ளினார். கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானவர்; அவரே என் தேவன், அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேன்; அவரே என் தகப்பனுடைய தேவன், அவரை உயர்த்துவேன்; கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம். பார்வோனின் இரதங்களையும் அவன் சேனைகளையும் சமுத்திரத்திலே தள்ளிவிட்டார்; அவனுடைய பிரதான அதிபதிகள் சிவந்த சமுத்திரத்தில் அமிழ்ந்து போனார்கள். ஆழி அவர்களை மூடிக்கொண்டது; கல்லைப்போல ஆழங்களில் அமிழ்ந்துபோனார்கள்" (யாத்திராகமம் 15:1-5).

மற்ற தேசங்களைப்போல தங்களுக்கும் ஒரு இராஜா வேண்டுமென்று இஸ்ரயேல் விரும்புவார்கள் என்று மோசே உபாகமம் 17:14-16-ஆம் வசனங்களில் தீர்க்கதரிசனமாக உரைத்தார். இராஜாவுக்குக் கொடுக்கப்பட்ட பல கட்டுப்பாடுகளுக்கு மத்தியில், தனக்கு குதிரைகளைப் பிடித்துக்கொள்ள வேண்டாம் என்ற கட்டளையும் கொடுக்கப்பட்டது. குதிரைகள் தடை செய்யப்படாமல் அவைகள் வரம்புக்கு

உட்பட்டிருக்க வேண்டும். மற்ற தேசங்களைப்போல இஸ்ரயேலர்கள் தங்களிடமுள்ள இராணுவ பலத்தை நம்பாமல்,தேவனுடையகரத்தில் நம்பிக்கைகொள்ள வேண்டுமென்று பொருள்படுவதைநாம் புரிந்து கொள்ளலாம். சங்கீதம்20:7,"சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள்; நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்." சங்கீதம் 33:17, "இரட்சிக்கிறதற்குக் குதிரை விருதா" அது தன் மிகுந்த வீரியத்தால் தப்புவியாது." அதுபோல நீதிமொழிகள் 21:31, "குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்" ஜெயமோ கர்த்தரால் வரும்."

தேவனைத்தவிர வேறெதையும் நம்ப வேண்டாம் என்று மற்ற தேசங்களிலும், அவர்களுடைய குதிரைகளின்மேலும் நம்பிக்கை வைக்க வேண்டாம் என்றும், இஸ்ரயேலில் சொந்த தீர்க்கதரிசிகள் அவர்களை மீண்டும் மீண்டுமாக எச்சரித்தார்கள். "சகாயமடையும்படி இஸ்ரயேலுடைய பரிசுத்தரை நோக்காமலும்,கர்த்தரைத் தேடாமலும், எகிப்துக்குப போய், குதிரைகள்மேல் நம்பிக்கைவைத்து, இரதங்கள் அநேகமாயிருப்பதினால் அவைகளை நாடி, குதிரைவீரர் மகா பெலசாலிகளாயிருப்பதினால் அவர்களை நம்பிக்கொண்டிருக்கிறவர்களுக்கு ஐயோ! ... எகிப்தியர் தெய்வம் அல்ல, மனுஷர்தானே; அவர்களுடைய குதிரைகள் ஆவியல்ல, மாம்சந்தானே; கர்த்தர் தமது கரத்தை நீட்டுவார், அப்பொழுது சகாயம் செய்கிறவனும் இடறி, சகாயம் பெறுகிறவனும் விழுந்து, அனைவரும் ஏகமாய் அழிந்து போவார்கள்" (ஏசாயா 31:1-3; ஆமோஸ் 4:10; ஓசியா 1:7, 14:3; ஏசாயா 2:7 மற்றும் எசேக்கியேல் 17:15).

இராஜாக்கள் தங்களுக்கென்று குதிரைகளைப் பெருக்கிக்கொள்ளக்கூடாது என்று மோசேயினால் உபாகமம் 17:16-ஆம் வசனத்தில் கொடுக்கப்பட்ட கட்டளை குறுகிய காலம் மட்டுமே நீடித்தது. இஸ்ரயேல்மேல் முதல் இராஜாவாகிய சவுல் இந்தப் பிரமாணத்தை மீறினார் என்று 1 சாமுயேல் 8:11-ஆம் வசனத்தில் காணப்படுகிறது. சவுலின் தீமையான மாதிரியை தாவீது பின்பற்றினதை, 2 சாமுயேல் 8:4-ஆம் வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆயினும் சாலொமோனின்கீழ் தடை செய்யக்கூடிய ஆவி முற்றிலுமாகக் கடந்துவிட்டது. ஏனெனில் உபாகமம் 17:14-20 வசனங்களில் மோசே தீர்க்கதரிசனத்தில் தடை செய்யப்பட்டிருந்த மூன்று காரியங்களும் இராஜவாகிய சாலொமோனால் மீறப்பட்டதென்று 1 இராஜாக்கள் 10:26-29 மற்றும் 1 இராஜாக்கள் 11-ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (1) குதிரைகளைப் பெருக்கிக்கொள்ளக்கூடாது, (2) குதிரைகளைப் பெருக்கிக்கொள்ள எகிப்துக்குச் செல்லக்கூடாது. (3) தனக்கென்று மனைவிகளைப் பெருக்கிக்கொள்ளக்கூடாது. இந்த அனைத்து கற்பனைகளையும் சாலொமோன் மீறினார். 1 இராஜாக்கள் 11 மற்றும் 12-ஆம் அதிகாரத்தில் காணலாம். அவர் எகிப்திலிருந்து குதிரைகளைச் சேகரித்தார். அவருக்கு ஆயிரத்து நானூறு இரதங்களும், பன்னிரண்டாயிரம் குதிரை வீரர்களும் இருந்தனர். அநேக அந்நிய ஸ்திரீகளின்மேல் அவர் ஆசைகொண்டார். அவருக்கு எழுநூறு மனைவிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள்!

**தீர்க்கதரிசனத்தில் குதிரைகள்:**

வசனங்களில் குதிரைகள் பயன்படுத்தப்பட்டதின் சுருக்கமான விவரமாவது, குதிரைகள் முக்கியமாக இராணுவ பயன்பாட்டிற்கே சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. மேலும் வேதாகமத்தின் தீர்க்கதரிசனத்தில் குதிரைகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்று நாம் புரிந்துகொள்வதற்கு, ஒரு அஸ்திபாரத்தைத் தருகிறது. போருக்கான இந்த இணைப்பு தொடர்கிறது குதிரைகளைச் சம்பந்தப்படுத்தி பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பலவிதமான தீர்க்கதரிசனங்கள் காணப்பட்டாலும் அவைகள் அதிகமாக போர்களையும் அல்லது சண்டைகளையுமே மையப்படுத்தியுள்ளது. சில எடுத்துக் காட்டுகள் பின்வருமாறு:-

"மகா உபத்திரவ காலம்" தீர்க்கதரிசனத்தில், யோயேல் கர்த்தருடைய திரளான சேனையைக் குறித்து, "ஏராளமான பலத்த ஒரு ஜாதி தீவிரமாக வந்து பரவும்; அப்படிப்பட்டது முன் ஒருகாலத்திலும் உண்டானதுமில்லை, இனித் தலைமுறை

தலைமுறையாக வரும் வருஷங்களிலும் உண்டாவதுமில்லை. அவைகளுக்கு முன்னாக அக்கினி பட்சிக்கும், அவைகளுக்குப் பின்னாக ஜுவாலை எரிக்கும்; அவைகளுக்கு முன்னாகத் தேசம் ஏதேன் தோட்டத்தைப்போலவும், அவைகளுக்குப் பின்னாகப் பாழான வனாந்தரத்தைப்போலவும் இருக்கும்; அவைகளுக்கு ஒன்றும் தப்பிப்போவதில்லை. அவைகளின் சாயல் குதிரைகளின் சாயலை ஒத்தது; அவைகள் குதிரை வீரரைப்போல ஓடும். அவைகள் ஓடுகிற இரதங்களின் இரைச்சல்போலவும், ... கர்த்தர் தமது சேனைக்குமுன் சத்தமிடுவார்; அவருடைய பாளயம் மகா பெரியது, அவருடைய வார்த்தையின்படி செய்கிறதற்கு வல்லமையுள்ளது; கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்; அதைச் சகிக்கிறவன் யார்?" (யோயேல் 2:2-5, 11) என்று பேசுகிறார்.

ஒன்றாம் அதிகாரத்தில் குதிரைகள் மற்றும் இரதங்களை அழிக்கக்கூடிய வெட்டுக்கிளிகளுக்கு ஒத்திருப்பதைக் குறிப்பிடுகிறது. சிலவகையான வெட்டுக்கிளிகளுக்கும், குதிரைகளின் தலைகளுக்குமுள்ள குறிப்பிட்ட ஒற்றுமைகள் காணப்படுகிறது. வெட்டுக்கிளிகள் ஒரு விநோதமான சமாளிக்க முடியாதளவுக்கு வேகமாக சத்தமிடுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே உருவகங்கள் என்ற வார்த்தை வல்லமையுள்ளது. மேலும் ஆண்டவர் திரளான சேனைகளோடு, குதிரைகள் மற்றும் இரதங்களின் உருவங்களை இணைக்கும்போது இந்த யுத்தத்தை நிறைவு செய்யும் பேரிடறலின் தரிசனமான சித்திரத்தை விரிவாக இது வெளிப்படுகிறது. இது தேவனுடைய இராஜ்யத்தின் மிகுந்த ஆசீர்வாதங்களை முன்னறிவிக்கக்கூடியதாக உள்ளது. அடுத்துவரும் இரண்டாம் அதிகாரத்தில் கர்த்தருடைய திரளான சேனைகளைக்கொண்டு ஏற்படுத்தப்பட்ட அழிவை மீண்டும் சீர்ப்படுத்துவதைப்போன்ற மிகப்பெரிய வேலைகளை தேவன் செய்வார் என்று யோயேல் கூறுகிறார் (யோயேல் 2:25).

**குதிரை மற்றும் இரதங்களின் மற்றொரு ஒரு வரைப்படம்:**

மீகா 5-ஆம் அதிகாரத்தில் ஈர்க்கப்படும் வரிசையான தீர்க்கதரிசனங்கள், முதலாம் வருகைக்கான தீர்க்கதரிசனத்தோடு துவங்குகிறது. அதற்குப் பின் மூன்றாம் வசனம், இரண்டாம் வருகைக்கான தீர்க்கதரிசனத்தை அறிவிக்கிறது. அந்நேரத்தில் மீதியாய் இருப்போர், "திரும்புவார்கள்." இஸ்ரயேல் ஜனங்கள் முன்னதாகவே கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள். ஐந்தாம் வசனத்தில், தேசத்திற்குள் வந்த இஸ்ரயேலை அழிக்கக்கூடிய வல்லமைகளாக அசீரியர்கள் சித்தரிக்கப் படுகிறார்கள். ஆனால் அவர்கள் ஏழு மேய்ப்பர்களாலும் (சபை), எட்டு பிரபுக்களாலும் (முற்பிதாக்கள்) மற்றும் இஸ்ரயேலில் மீதியாய் இருப்பவர்களும், ஆட்டு மந்தைகளுக்குள் ஒரு சிங்கம் தடைசெய்வதுபோல விவரிக்கப்படுகிறார்கள் (யோயேல் 5:8).

இறுதியாக மீதியாயிருப்பவர்கள், 7-ஆம் வசனத்தில் சொல்லியபடி, பல ஜனங்களின் மத்தியில் அல்லது நடுவில் ஒப்புணர்வு ஊட்டுவதற்கு கர்த்தரிடத்திலிருந்து வரும் பனியைப்போல் இருப்பார்கள் - பொழியப்படும் ஆசீர்வாதம் தாமதிக்கவுமாட்டாது, மனுஷருக்காகக் காத்துக்கொண்டும் இருக்காது. தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டக் காரியங்களைத் தடுக்கவோ, ஊக்குவிக்கவோ மனிதனால் கூடாது. கட்டுரையில் 15-ஆம் வசனங்களில், நாம் கவனிக்க வேண்டிய விசேஷித்தக் காரியங்கள் உண்டு. "அந்நாளிலே நான் உன் குதிரைகளை உன் நடுவில் இராதபடிக்குச் சங்கரித்து, உன் இரதங்களை அழித்து" என்று 10-ஆம் வசனம் கூறுகிறது. இதற்கு இஸ்ரயேலின் எதிராளிகளின் வல்லமைகளை தேவன் சரி செய்வார் என்றும் பொருள்படலாம். ஆனால் தேவன் இஸ்ரயேலின் குதிரைகளையும், இரதங்களையும் அழித்துப் போடுகிறார் என்று 10-ஆம் வசனம் கூறுகிறது ஏன்? ஏனெனில் 15-ஆம் வசனம் கூறுகிறபடி, "செவிகொடாத புறஜாதிகளிடத்திலே கோபத்தோடும் உக்கிரத்தோடும் நீதியைச் சரிக்கட்டுவேன் என்றார். " இஸ்ரயேல் இராணுவ வல்லமையால் அல்ல, மாறாக இஸ்ரயேலின் எதிராளிகளை அழிப்பவர் தேவனே.

இன்றைக்கு இஸ்ரயேல் பெரும் வன்முறையான எதிர்ப்புகளின் முகங்களின் பறகளுக்குள் தன்னைத்தான் ஆயுதங்களினால் காத்துக்கொள்கிறது. ஆயினும் ஒருநாள் வரும். அந்த நாளில் தேவனுடைய அற்புதமான மீட்பைக் காணும்படியாக அவர் இஸ்ரயேலின் சகலவிதமான

இராணுவ வல்லமைகளையும் தரித்துப்போடுவார் என்று தீர்க்கதரிசி நமக்கு அறிவிக்கிறார். (ஆசிரியர் குறிப்பு: சகலமும் முடிந்தபின்பு இஸ்ரயேலுக்கு எந்தவிதமான பொதுவான இராணுவ வல்லமைகளும் தேவைப்படாது என்பது காரணமாக உள்ளது. மீகா 5:5-ஆம் வசனத்தில், மீதியுள்ளவர்கள் ஆயுதம் தரித்தவர்களாக நிற்பார்கள் என்று கூறப்படுகிறது. 2 இராஜாக்கள் மூன்றாம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்ட வெற்றி ஆயுதம் தரித்த சேனைகளின் மீட்பர் என்று சொல்லப்படுகிறது). "இவ்விதமாய் நான் அநேக ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக என் மகத்துவத்தையும் என் பரிசுத்தத்தையும் விளங்கப்பண்ணி, அறியப்படுவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்" (எசேக்கியேல் 38:23). குதிரைகள் மற்றும் இரதங்களின்மேல் நம்பிக்கைக்கொள்ளாமல், தேவன்மேல் மட்டும் நம்பிக்கைக்கொள்ள வேண்டும் என்று மோசே மற்றும் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் இஸ்ரயேலுக்கு மீண்டும் நினைப்பூட்டப்படும்.

**வெளிப்படுத்தல் 19**

தீர்க்கதரிசனத்தில் குதிரைகளைப்பற்றிய கடைசி எடுத்துக்காட்டை நாம் வெளிப்படுத்தல் 19-ஆம் அதிகாரத்தில் காணலாம். இந்த அதிகாரத்தில் தேவனுடைய வார்த்தைகள் மற்றும் அவருடைய நற்குணத்தைக்கெடுத்து, தூஷித்த பொய்மத அமைப்புகள் மற்றும் பூமியின் இராஜாக்கள் மற்றும் அவர்களின் சேனைகளின் அழிவையும் மிகச் சிறந்த முறையில் வரைப்படமாகக் காட்டப்படுகிறது. ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்தைத் தொடர்ந்து (7-10), வானம் திறந்திருப்பதையும், இயேசு மற்றும் சபை (11-14) வெள்ளைக்குதிரைகளின்மேல் தேவனுடைய எதிரிகளை அழிப்பதற்கு யுத்தகளத்திற்குச் செல்லும், சிறந்த வியப்பூட்டும் காட்சியைக் கண்டதாக வெளிப்படுத்துபவர் கூறுகிறார். "பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்" (வெளிப்படுத்தல் 19:11).

ஒருமுறை இயேசு சாந்தமும் அமைதலான இராஜாவாக கழுதையின்மேலும், கழுதைக்குட்டியின் மேலும் ஏறிவந்து, தம்மையே இஸ்ரயேலுக்கு இராஜாவாக வெளிப்படுத்தினார் (மத்தேயு 21:5). ஆனால் இப்பொழுது கழுதையின்மேல் சாந்தகுணமுள்ளவராக அல்ல, தம்முடைய சபையோடு வெள்ளைக்குதிரையின்மேல் நீதியான தீர்ப்பு வழங்கும்படி வந்திருக்கிறார். இது உலகத்தின் பாவத்தைப் புறம்பாக்கி, அகற்றி துப்புரவாக்குவதற்கு, பரிசுத்தமும், நீதியும் ஏறெடுக்கும் போரை சித்தரிக்கிறது. இதோடு தேவன், "பூமியின்மேல் யுத்தங்களை ஓயப்பண்ணுவார்" அவர் வில்லை ஒடித்து ஈட்டியை முறித்து அக்கினியால் சுட்டெரிப்பார் (சங்கீதம் 46:9). "சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள்; நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக்குறித்தே மேன்மை பாராட்டுவோம்" (சங்கீதம் 20:7). ஆமென்.

**பாவத்தின் வல்லமை**

# வேதாகமத்தில் சர்ப்பம்



Brian Jakubowski

"தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது " (ஆதியாகமம் 3:1).

குறிப்பாக வேதாகமத்தில் தேவனுடைய சிருஷ்டிப்பில், சாபத்தைப்பெற்ற ஒரே சிருஷ்டி சர்ப்பம் அல்லது பாம்பு. இது அச்சுறுத்துகிற தனி சிறப்பு வாய்ந்தது. சர்ப்பத்தின் ஆலோசனையின்படி, தாயாகிய ஏவாள், வஞ்சிக்கப்பட்டு நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்தாள். அதற்குப் பின் அவள் அதை ஆதாமுக்குக் கொடுத்தாள். தேவன் அதைப் புசிக்க வேண்டாம் என்று தடுத்திருந்தபோதிலும், முழு உணர்வோடு அதை வாங்கிப் புசித்தான். இதன் காரணமாக, முழு மனுக்குலமும் 6000 வருடங்களாக பாவத்திலும், வியாதியிலும், இடுக்கத்திலும், மரணத்திலும் முழுகிப்போனது. அந்த அதிகாரத்தின் 14-ஆம் வசனம், சர்ப்பத்திற்குக் கொடுத்த தீர்ப்பு விவரிக்கப்படுகிறது.

**எபிரெய வார்த்தைகள் சர்ப்பம் என்று மொழிப்பெயர்க்கப்பட்டது.**

வசனங்களில் ஒன்பது வார்த்தைகள் சர்ப்பம் அல்லது பாம்பு என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் ஆறு இடங்களிலும், புதிய ஏற்பாட்டில் மூன்று இடங்களிலும் காணப்படுகிறது. மற்ற மூன்று வார்த்தைகள் ஆஸ்ப் (asp) மற்றும் காக்கட்ரைஸ் (cockatrice) என்று காணப்படுகிறது.

மிகுதியாகக் காணப்படும் இரண்டு எபிரெய வார்த்தைகள் நாக்காஷ் (nachash) மற்றும் டானியன் (tanniyn) ஆகும். பழைய ஏற்பாட்டில், ஏதேன் தோட்டத்தில் சர்ப்பத்தை அடைாளப்படுத்துவதற்கு நாக்காஷ் (nachash) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. பல இடங்களில் வனாந்தரத்தின் அருகாமையிலுள்ள பாம்புகளையும் விவரிப்பதற்கு நாக்காஷ், சாராப் (saraph) இணைந்து பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக கிங் ஜேம்ஸ் பைபிளில், நாக்காஷை சர்ப்பம் என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாடு முழுவதிலும் டானியன் (tanniyn) என்ற மற்றொரு எபிரெய வார்த்தை, டிராகன் (dragon) அல்லது அரக்கர் (sea monster) என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. யாத்திராகமத்தில் மோசே மற்றும் ஆரோனின் கோல்கள் பாம்புகளாக மாறியது. மோசேயின் கோல் நாக்காஷ் என்றும் (யாத்திராகமம் 4:3), ஆரோனின் கோல் டானியன் (tanniyn) (யாத்திராகமம் 7:9) என்றும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

"சர்ப்பம்" என்ற வார்த்தை ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்தில் முதன்முறையாக காணப்படுவது இல்லை. மிருக ஜீவன்களில் சிருஷ்டிப்பைக்குறித்து ஆதியாகமம் 1:21-ஆம் வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. இவைகள் மிகப்பெரிய மீன்களும் கடல்வாழ் ஜந்துக்களாகும். "கடல்வாழ் ஜந்துக்கள்" என்ற வார்த்தை டானியன் (tanniyn) என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும். இது துல்லியமாக சர்ப்பம் என்று மொழிபெயர்க்கப்பட வேண்டும். இப்படியாக ஏவாளை வஞ்சித்ததற்காக சாத்தான் சிருஷ்டிப்புகளில் டானியன் (tanniyn) ஒரு கருவியாகப் பயன்படுத்திய காரணத்தின் கருத்தை இது விவரிக்கலாம்.

**பாவத்தின் மேலுள்ள வல்லமையை அடையாளப்படுத்தும்:**

கிரேக்கர், மெசொப்பொத்தாமியா, கானான் மற்றும் பண்டைய கால எகிப்தின் மதம் மற்றும் நாகரீகத்தின் முக்கியமான வேறுபட்ட பாத்திரங்களாக சர்ப்பத்தின் அடையாளம் செயல்பட்டு வந்தது. இது தீமையின் வல்லமைக்கும், குழப்பத்திற்கும் மட்டுமல்ல செழுமை, வாழ்வு மற்றும் சுகப்படுத்துவதற்கும் அடையாளமாகக் கருதப்படுகிறது. இப்படியாக பழங்கால நாகரீகத்தில் சர்ப்பம் ஒரு இரட்டை வேட அடையாளமாகச் செயல்பட்டது. இந்நாளிலும் இக்காரியம் உண்மையாகக் காணப்படுகிறது. சர்ப்பம், தீமை மற்றும் பாவத்திற்கு மட்டுமல்ல குணப்படுத்துதலின் அடையாளமாக இன்னும் பயன்படுகிறது. எடுத்துக்காட்டாக மருத்துவம் மற்றும் குணப்படுத்துதலோடு சம்பந்தப்பட்டிருக்கும் கிரேக்க கடவுளான அஸ்கிளிப்பியஸ் (Asclepius)-யிடம் சர்ப்பம் பிணைக்கப்பட்ட ஒரு கோல் இருக்கிறது. இந்த நவீன காலத்திலும் உடல்நல பராமரிப்பிலும், மருத்துவத்திலும் சர்ப்பம் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுவருகிறது.

வசனங்களில் சர்ப்பம், "காலம் தீமையின்மேலுள்ள வல்லமையை" துல்லியமாக

அடையாளப்படுத்துகிறது. மனுஷனுடைய வீழ்ச்சி, சர்ப்பத்தினாலல்ல, சர்ப்பத்தைப் பயன்படுத்தின எதிராளியாகிய பிசாசினால் தந்தையாகிய ஆதாம் கீழ்ப்படியாமைக்குள் மயக்கி சிக்கவைத்து, இந்த உலகத்திற்குள் பாவத்தைப் பிரவேசிக்கச் செய்ததாக ஆதியாகமம் கூறுகிறது.

மோசேயும், ஆரோனும் பார்வோனுக்கு முன் நின்ற விவரங்களைக்குறித்து, "கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: உங்கள் பட்சத்திற்கு ஒரு அற்புதம் காட்டுங்கள் என்று பார்வோன் உங்களோடே சொன்னால்; அப்பொழுது நீ ஆரோனை நோக்கி: உன் கோலை எடுத்து அதைப் பார்வோனுக்கு முன்பாகப் போடு என்பாயாக; அது சர்ப்பமாகும் என்றார். மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் போய், கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிட்டபடி செய்தார்கள். ஆரோன் பார்வோனுக்கு முன்பாகவும், அவன் ஊழியக்காரருக்கு முன்பாகவும் தன் கோலைப் போட்டான், அது சர்ப்பமாயிற்று. அப்பொழுதுபார்வோன் சாஸ்திரிகளையும், சூனியக்காரரையும் அழைப்பித்தான்.எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திர வித்தையினால் அப்படிச் செய்தார்கள்" என்பதை (யாத்திராகமம் 7:8-13) வசனங்களில் காணலாம்.

சர்ப்பம், "பாவத்தின்மேல் வல்லமை" கொண்டதாக இந்த வேதப்பகுதி சித்தரிக்கிறது. இஸ்ரயேல் ஜாதிக்கு முதல் பிரதான ஆசாரியனாக நியமிக்கப்படக்கூடிய ஆரோன் அவர் கையிலிருக்கும் கோலை கீழே போடும்படி கட்டளைப்பெற்றார், அது சர்ப்பமாக மாறியது. எகிப்திலுள்ள ஞானிகளும், மந்திரவாதிகளும் இந்த அற்புதத்தைச் செய்தாலும், ஆரோனுடைய சர்ப்பம் எல்லா சர்ப்பங்களையும் விழுங்கியது. அந்த மந்திரவாதிகள், தங்களுடைய கோல்களை பாம்புகளாக மாற்றக்கூடிய திறமையானது, பாவத்தின்மேல் உரிமையைப் பெற்றிருக்கும், தங்களுடைய மதம் சார்பான போலியான அதிகாரத்தைச் சித்தரிக்கலாம். பாவத்திலிருந்து விடுவிப்பதற்கு அதிகாரம் உண்டு என்று கோருகிற கத்தோலிக்கர்களின் கோரிக்கைகளில், இது உண்மையாகக் காணப்படுகிறது. இதுபோல மற்ற மதங்களிலும், பாவத்தின் தண்டனைகளைக் குறைக்கும் அல்லது பாவத்தை நீக்கும் கருவிகளாக மறுபிறப்பு, புனித யாத்திரைகள் மற்றும் விதவிதமான தவங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

வெவ்வேறு மதங்களில் பாவம் நீக்குவதற்காகக் செலுத்தப்படும் காணிக்கைகளைக் காட்டிலும் தேவனுடைய திட்டத்தில் பாவத்திற்க்குண்டான விடுதலை மேலோங்கி இருப்பதை ஆரோனின் சர்ப்பம் போலியான சர்ப்பங்களை விழுங்கியதில் சித்தரிக்கப்படுகிறது.

எண்ணாகமம் 21-ஆம் அதிகாரத்தில் கடுமையான வனாந்தரப் பயணத்தினால் சோர்வடைந்து பொறுமையிழந்தார்கள். "ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி: நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை; இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள். அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார்; அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரயேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள். அதினால் ஜனங்கள் மோசேயினிடத்தில் போய்: நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ்செய்தோம்; சர்ப்பங்கள் எங்களைவிட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றார்கள், மோசே ஜனங்களுக்காக விண்ணப்பம்பண்ணினான். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை, கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப்பார்த்தால் பிழைப்பான் என்றார்" (எண்ணாகமம் 21:5-8).

இந்த அறிக்கையில் பாவத்தின்மேலுள்ள வல்லமை திறமையாகக் கையாளுவதை நாம் காணலாம். சர்ப்பத்தின் விஷம் அநேக ஜனங்களின் மரணத்திற்குக் காரணமாக இருந்தது. ஆகவே அவர்களுக்காக தேவனிடத்தில் பரிந்து பேசுவதற்கு, அவர்கள் மோசேயிடம் சென்றார்கள். உண்மையில், "பாவத்தின் சம்பளம் மரணம்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 6:23-ஆம் வசனத்தில் குறிப்பிடுகிறார்.

**சர்ப்பம் இயேசுவை அடையாளப் படுத்துகிறது:**

ஒரு செம்பினால் சர்ப்பத்தைச் செய்து உயரமான கம்பத்தின்மேல் வைக்கும்படிக்கு மோசேக்குக் கட்டளையிடப்பட்டது. அதற்குப்பின் ஒரு பாம்பு எந்த மனிதனைக் கடித்தாலும், அந்தச்

செம்பினாலான சர்ப்பத்தை நோக்கிப்பார்த்தால் அவன் பிழைப்பான்!

இந்தச் செம்பினாலான சர்ப்பம் நம்முடைய ஆண்டவருக்கு நிழலாக இருந்தது என்று யோவான் 3:14, 15 வசனங்கள் குறிப்பிடுகிறது. "சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்பட வேண்டும்."

மீண்டும் இந்த சர்ப்பம், "பாவத்தின்மேலுள்ள வல்லமையை" அடையாளப்படுத்துகிறது. பாவத்தின் விஷம் ஏதேனிலுள்ள சர்ப்பத்தினால் மனுஷனுக்குள் புகுத்தப்பட்டாலும் ஒரு மரத்தின்மேல் உயர்த்தப்பட்ட செம்பினாலான சர்ப்பம் ஆதாமுக்கும், அவருடைய முழு சந்ததிக்கும் ஈடுபலியை மனப்பூர்வமாகச் செலுத்துவதற்காக, சிலுவையின்மேல் உயர்த்தப்பட்ட இயேசு கிறிஸ்துவைச் சித்தரிக்கிறது. இந்த மிகப்பெரிய பலி, பாவத்தை அகற்றி சாபத்தின் விளைவுகளை தள்ளுபடி செய்து, முழு மனித இனத்தையும் பரிபூரணத்திற்குத் திரும்பச் செய்யும்.

கிட்டத்தட்ட 700 வருடங்களாக இந்தச் செம்பினாலான சர்ப்பம் சுற்றித் திரிந்துக்கொண்டிருந்தது. நீதியுள்ள எசேக்கியா இராஜா ஒரு மத சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டார். "மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்டான்; அந்நாட்கள்மட்டும் இஸ்ரயேல் புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள்; அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான்" (2 இராஜாக்கள் 18:4-6). (செம்பு - கிறிஸ்து இயேசுவின் பரிபூரண மனித தன்மையை அடையாளப்படுத்துகிறது). சாத்தானுடைய நுணுக்கமான தந்திரத்தைப் பார்க்கும்படியாக, செம்பினாலான சர்ப்பம் ஒரு கோலின் தெய்வமானது. அவன் இந்தச் சர்ப்பங்களின் குணங்களைப் பயன்படுத்தி கண்ணிகளையும், இடறல்களையும் உருவாக்குகிறான்.

**சர்ப்பத்தின் குணலட்சணங்கள்:**

முற்பிதாவாகிய யாக்கோபின் முடிவு நாட்களில், அவருடைய பன்னிரண்டு குமாரர்களுக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களில் சர்ப்பத்தின் தந்திரமான சூழ்ச்சிகள் காட்டப்படுகிறது. விநோதமான ஒரு ஆசீர்வாதம் தாணுக்குக்கொடுக்கப்பட்டது. "தாண், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவன் மல்லாந்து விழும்படியாய் அதின் குதிகாலைக் கடிக்கிறதற்கு வழியில் கிடக்கிற சர்ப்பத்தைப்போலவும், பாதையில் இருக்கிற விரியனைப்போலவும் இருப்பான்" (ஆதியாகமம் 49:17).

இந்தப் பகுதியில், "பாம்பு" என்று சொல்லப்பட்ட சர்ப்பம், கூர்மதியுள்ள வனாந்தர விரியனாக இருக்க வேண்டும். இந்த வகையான சர்ப்பம் நம்புவதற்கரிய துவளுகிற தன்மையுள்ளது. அதற்கு முதுகெலும்பு இல்லாததுபோலிருக்கும். மற்ற மிருக ஜீவன்களை வஞ்சிக்கும்படியாக அவைகளின் உணவு இருப்பதுபோல அதனுடைய தலையை மணலில் புதைத்து, அதனுடைய கொம்புகளை மட்டுமே தலைக்குமேல் சுருக்கிக்கொண்டிருக்கும். ஏதோ ஒரு களைப்பற்ற மிருகம் வரும்போது அந்த விரியன் விரைவாக அந்த மிருகத்தைக் கொன்றுவிடும்.

அந்தக் கோத்திரத்தாரின் முன்மதியை அடையாளப்படுத்தும்படியாக யாக்கோபு இப்படி அறிவித்திருக்க வேண்டுமென்று பல விமர்சகர்கள் கூறியுள்ளார்கள். ஏனெனில் இவர்கள் எதிராளியைப் பலத்தினாலும் அல்லது இராணுவ வல்லமையினாலும் ஜெயிப்பதைக் காட்டிலும், அவர்களின் தந்திரத்தால் ஜெயிக்கக்கூடியவர்களாக இருந்தார்கள். கூடுதலாகக் குறிப்பிட்ட இந்தச் சர்ப்பத்திற்கும், பாவத்திற்கும் இடையிலுள்ள இணையைக் காணலாம். பாவத்தின் வஞ்சகத்தையும், தந்திரத்தையும் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 7:7-25-ஆம் வசனங்களில் ஆராய்கிறார் (ரோமர் 7:11). சிந்தனைகள், நோக்கங்கள் மற்றும் இருதயத்தின் யோசனைகள்.

"எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?" (எரேமியா 17:9). நம்முடைய சிந்தனை மற்றும் நோக்கங்கள் அடிப்படையாகவே சீர்கெட்டதாக உள்ளது. வனாந்தர விரியனைப்போல் காயப்படுத்திக் கொல்லுவதற்கு பாவம் ஆயத்தமாகப் பதுங்கிக் காத்திருக்கிறது. பாவத்தின் வஞ்சனையை நாம் கண்டு பிடிக்காதபடிக்குப் பாவத்தின் இயல்பு நம்மை ஏமாற்றிவிடுகிறது.

**மற்ற குறிப்புகள்:**

பழைய ஏற்பாட்டில், சர்ப்பங்களை குறிப்பிடும் மற்ற வேதபகுதிகளும் உண்டு. ஆனால் அவைகள் முக்கிய பங்கு வகிக்கவில்லை. இந்த வேத பகுதிகளில் சர்ப்பம், சாத்தானை விவரிப்பதற்கு

உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. "அக்காலத்திலே கர்த்தர் லிவியாதான் என்னும் நீண்ட பாம்பை, லிவியாதான் என்னும் கோணலான சர்ப்பத்தையே, கடிதும் பெரிதும் பலத்ததுமான தமது பட்டயத்தால் தண்டிப்பார்; சமுத்திரத்தில் இருக்கிற வலுசர்ப்பத்தைக் கொன்றுபோடுவார்" (ஏசாயா 27:1).

விரைந்தோடும் பாம்பைப்போலவும், கோணலான சர்ப்பத்தைப்போலவும் அரக்கன் பாம்பைப்போலிருக்கும் சாத்தானின் அழிவை இந்த வசனம் சித்தரிக்கிறது. இவனே இந்த உலகத்திற்குப் பாவத்தைப் புகுத்துவதற்கு சர்ப்பத்தைப் பயன்படுத்தினவன். இறுதியாக அவனுடைய கிரியைகளுக்கு அவனே பதிற்சொல்ல வேண்டியதாக இருக்கும்.

சாத்தானைப்பற்றிய இந்த விவரங்கள் புதிய ஏற்பாட்டில் மறுபடியும் கூறப்பட்டதாக காணப்படுகிறது. "உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்." (வெளிப்படுத்தல் 12:9). இது வெளிப்படுத்தல் 20:1, 2-ஆம் வசனங்களில் மறுபடியும் கூறப்பட்டுள்ளது. இங்கு ஒரு தூதன், பாதாளத்தின் திறவுகோலையும், பெரிய சங்கிலியையும் தம் கையில் பிடித்துக்கொண்டு பரலோகத்திலிருந்து இறங்கினார். "பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்தான்."

துன்மார்க்கத்தையும், தீமையையும் விவரிப்பதற்கு சர்ப்பம் பயன்படுத்தப்பட்டது. "துன்மார்க்கர் கர்ப்பத்தில் உற்பவித்ததுமுதல் பேதலிக்கிறார்கள்; தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் பொய் சொல்லி வழிதப்பிப் போகிறார்கள். சர்ப்பத்தின் விஷத்திற்கு ஒப்பானவிஷம் அவர்களில் இருக்கிறது" (சங்கீதம் 58:3, 4). தீமையான ஜனங்களிடமிருந்து பாதுகாக்கப்படுவதற்காக இராஜாவாகிய தாவீதின் ஜெபத்தில் மறுபடியும் இக்காரியம் குறிப்பிடப்படுவதைக் காணலாம். "கர்த்தாவே, பொல்லாத மனுஷனுக்கு என்னைத் தப்புவியும்; கொடுமையுள்ளவனுக்கு என்னை விலக்கி இரட்சியும். அவர்கள் தங்கள் இருதயத்தில் பொல்லாப்புகளைச் சிந்தித்து, யுத்தஞ்செய்ய நாள்தோறும் கூட்டம் கூடுகிறார்கள். சர்ப்பத்தைப்போல் தங்கள் நாவைக் கூர்மையாக்கு கிறார்கள்; அவர்கள் உதடுகளின்கீழ் விரியன் பாம்பின்விஷம் இருக்கிறது" (சங்கீதம் 140:1-3).

கட்டுவிரியன்கள் மற்றும் விரியன் பாம்புகளைப் பற்றிக் குறிப்பிடும் மற்ற வசனங்கள், அதிகமாக உண்மையான பாம்பையும் அவைகளின் இயல்பாகவே கொண்டுள்ள விஷத்தையும் குறிப்பிடுகிறது. ஆனால் இந்தப் பகுதிகள் சில முக்கியமான அடையாளங்களைக் கொண்டிருப்பதை நாம் நிச்சயித்துக்கொள்ளலாம்.

நம்முடைய ஆண்டவர் ஆயிரவருட ஆட்சியில் ஓர் அருமையான சித்திரத்தை ஏசாயா 11-ஆம் அதிகாரம் நமக்குத் தருகிறது. பல்வேறு வடிவத்திலிருக்கும் ஒரு வகையான சர்ப்பம் இங்கே காணப்படுகிறது. அந்நாட்களில், "பால் குடிக்குங்குழந்தை விரியன் பாம்பு வளையின்மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும். என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை" என்று ஏசாயா 11: 8, 9 வசனங்கள் கூறுகிறது. அப்போது சர்ப்பம் இனி ஒருபோதும், "பாவத்தின்மேல் வல்லமைகொள்ளாது. " அதனுடைய விஷமான கொடுக்கில் ஒருபோதும் மனுக்குலத்தைக் காயப்படுத்திக் கொல்லாது. அதனுடைய வஞ்சகங்களும், தந்திரங்களும் இனி ஒருபோதும் மனுஷரை வஞ்சிக்காது. ஏனெனில், "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசாயா 11:9). இதில் ஆச்சரியப்படக்கூடிய காரியம் என்னவெனில், ஒரு சர்ப்பம் திடீரென்று ஒரு பயணியின் குதிங்காலைக் கடிப்பதுபோல, இந்தத் தந்திரமானது அவர்களுக்கு அபாயத்தை விளைவிக்கும்.

குடிசையிலிருந்து கோபுரத்திற்கு

# வேதாகமத்தில் நாய்கள்



Gary Johnson

"நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே" (மத்தேயு 15:27).

மிருகங்கள் நோவாவோடு உயிரோடு காக்கப்படுவதற்காகவே பேழைக்குள் அவைகளைச் சேர்த்துக்கொள்ளும்படிக்கு நோவா கட்டளைப் பெற்றார் (ஆதியாகமம் 6:19). அந்த மிருகங்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருந்தது. "அசுத்தமானவை" இரண்டு ஜோடிகளும், "சுத்தமானவை" ஏழு ஜோடிகளும், பறவைகள் மற்றும் மிருகங்கள் (பலி செலுத்தக்கூடியவைகள்). இப்படியாக ஆண்டவர் சுத்தமான மற்றும் அசுத்தமான மிருகங்களோடு நாய்களையும் உண்டாக்கினார்.

### நாய்களோடு வரலாற்று தொடர்பு "கதைகள்"

நம்முடைய ஆண்டவரின் நாட்களில், பெரும்பாலும் நாய்கள் விலக்கப்பட்ட விலங்காக வாழ்ந்திருப்பதாகக் காணப்படுகிறது. அவர்களின் தகுதி நிலைப்படி, "நாய்கள்" என்ற வார்த்தை அவமதிப்புக்குரியதாகவும், சிறப்பு சடங்குகளை ஆசரிக்க முடியாதபடிக்கு அசுத்தமாகக் கருதப்படுபவைகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய வார்த்தையாகவும் இருந்தது. இதனால் யூத ஜாதிக்குப் புறம்பான யாவரும் "நாய்கள்" என்று அழைக்கப்படுவது வழக்கமாய் இருந்தது. மற்ற தெய்வங்கள் மற்றும் விக்கிரகங்களின் வழிபாட்டில் நெறி தவறி விடாதபடிக்கு, யூதர்கள் அல்லாத புற ஜாதிகளிடமிருந்து தம்முடைய ஜனத்தை விட்டுப் பிரிந்திருக்கும்படி தேவன் கட்டளையிட, புறஜாதிகள் தங்களுக்குக் கீழானவர்கள் என்று யூதர்கள் அந்தக் கட்டளையை வேறு நிலையில் எடுத்துக்கொண்டார்கள். ஆகவே யூதர்கள் மற்றவர்களைப் பிடிவாதமாக நாய்கள் என்று குறிப்பிடுவதற்கு வழிநடத்தியது. யூதர்கள் அல்லாத தேசங்களில்கூட நாய்கள் பொதுவான இடங்களில் அனுமதிக்கப்படுவதில்லை. இந்நாள் வரைக்கும் நாய்கள் அசுத்தமானவைகள் என்று தடை செய்யப்பட்டுள்ளது. இஸ்லாமியர்களின் வழக்கத்தின்படி நாய்கள் அசுத்தமானவைகள்.

யூத பிரமாணத்தின் ஓர் ஆர்வமூட்டும் உண்மை விக்கிப் பீடியாவில் காணப்படுகிறது. மேலும் நமக்கு முன்மாதிரியாய் இருப்பதற்குப் பாத்திரமானதாகச் சிறந்த ஆலோசனை தரக்கூடியதாகவும் இருக்கலாம். "யூத பிரமாணம் நாய்களையும் மற்ற செல்லப் பிராணிகளையும் வைத்துக்கொள்வதை தடுப்பதில்லை. தங்களுக்கு முன்னதாகவே நாய்களுக்கு உணவளித்து அவைகளுக்கு உணவு கொடுக்க ஆயத்தங்களைச் செய்யவேண்டுமென்று யூத பிரமாணம் வேண்டுகோள் விதிக்கிறது" ("Dog," Wikipedia).

கானானிய ஸ்திரீ பிசாசு பிடித்திருந்த தன்னுடைய மகள் குணமடைவதற்கு இயேசுவினிடம் மன்றாடினாள். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட யூதர்களுக்கு மட்டுமே சுவிசேஷத்தைப் போதிக்க வேண்டுமென்ற பிதாவின் திட்டத்தைக் கீழ்ப்படிவதில் இயேசு மிக உறுதியோடு இருந்ததை இந்த சம்பவத்தின் பதிவை நாம் காணலாம். அக்காலத்தின் யூத ஜாதி மற்ற தேசங்களின்மேல் கொண்டுள்ள பொதுவான மதிப்பீட்டையும் நாம் காணலாம். அனைவர்மேலும் நம்முடைய ஆண்டவர் கொண்டிருக்கும் அன்பை அறியாதிருந்தால் இயேசு அந்த ஸ்திரீயிடம் கவலையற்று பதிலளிப்பார் என்று எண்ணலாம்.

"பின்பு, இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தீரு சீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப் போனார். அப்பொழுது, அந்தத் திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக் கூப்பிட்டாள். அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து: இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவர்: காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல என்றார். அவள் வந்து: ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள். அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார். அதற்கு அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள்

தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார்" (மத்தேயு 15:21-28).

இயேசுவின் பிரசங்கம் அந்த ஸ்திரீ கேட்பதற்கு மட்டுமல்ல, பரிசுத்த ஆவியைப் பெற்றபின் சீஷர்களுக்கும் ஒரு பாடமாக விளங்கும்படிக்குப் பேசினார். அந்த ஸ்திரீ வெறும் ஒரு புறஜாதியாக, "நாயாக" இருந்தபோதிலும், அந்த ஸ்திரீயின் விலையேறப்பெற்ற விசுவாசத்தின் மாதிரியின் உட்பொருளை அப்பொழுது அவர்களால் புரிந்துகொள்ள முடிந்திருக்கும். சீஷர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெறுவதற்கு முன்னிருந்த நிலையை விட்டொழித்து விசுவாசத்திற்குள் புறஜாதிகளை ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தப்பட்டிருப்பார்கள்.

சீஷர்கள் மற்றும் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பெற்றப் பின், புறஜாதிகளை "நாய்கள்" என்று அழைக்கக்கூடிய தங்களுடைய தேசத்தின் தலைவர்களும் ஜனங்களின் மனப்பான்மையையும் குறித்து எத்தனைமுறை சிந்தித்திருப்பார்கள் என்று நாம் ஆச்சரியப்படுகிறோம். ஆனால் அந்த "நாய்கள்" இப்பொழுது ஆவிக்குரிய சகோதரர்களானார்கள்! தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் எவ்வளவு பெருமைக்கொண்டவர்களாகவும், வீம்பு நிறைந்தவர்களாகவும் மாறினார்கள் - அந்நேரத்தில், அது எவ்வளவு தாழ்மையுள்ள அனுபவமாக இருந்திருக்க வேண்டும்! நாய்கள் என்று அவர்கள் அழைத்த அதே ஜனங்கள், தூதர்களோடு தேவனுடைய ஜனங்களாக மாறுவார்கள்.

**புறஜாதிகளுக்கான ஐசுவரியத்தின் துவக்கம்:**

ஐசுவரியவான் மற்றும் லாசரு என்ற ஏழையும் ஐசுவரியமுள்ள அந்த மனுஷன் தேவனுடைய இரக்கத்தைப் பெற்றிருந்ததினால் இஸ்ரயேலை அடையாளப்படுத்தினார். அவர்கள் சுத்திகரிக்கப்பட்ட நிலையினிமித்தம், தேவனுடைய ஆவிக்குரிய போஷாக்கை நித்தமும் உண்டு மகிழ்ந்தான். யூதர்கள் அல்லாதவர்களுக்கு எதுவும் மீந்திருக்கவில்லை. "மேஜையின்மேலிருந்து விழுந்த துணிக்கைகள்," நாய்கள் என்று அழைக்கப்படும் புறஜாதிகளுக்குக் கிடைத்தது. (இவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு ஆயத்தமாக இருந்த புறஜாதிகளை அடையாளப்படுத்துகிறது). இந்த நெருக்கமானப் பாதையில் செல்வதற்குத் தேவைப்படும் ஆவிக்குரிய போஷாக்கை அவர்களுக்குத் தடை செய்யப்பட்டிருந்தது. சுவிசேஷம் அனைவருக்காக திறக்கப்பட்டபோது நிச்சயமாக கொர்நெலியுவைப் போல பல புறஜாதிகள் தேவனுடைய வார்த்தையைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாக இருந்ததுபோல தோன்றுகிறது (அப்போஸ்தலர் 10).

**அனைவருக்குமுள்ள ஐசுவரியம்**

அமெரிக்காவின் நாகரீகத்தின்படி வீட்டில் வளர்க்கப்படும் நாய்களோடு நாம் கொண்டுள்ள தொடர்பு, நோவாவின் காலம் மற்றும் இயேசுவின் முதல் வருகை துவங்கி அதிகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இன்றைக்கு நாய்கள் மனுக்குலத்திற்குப் பல வழிகளில் உதவி செய்கிறது. இவைகள் டிரில்லியனுக்குள் ஒரு பகுதியைக்கூட மோப்பம் பிடித்து கண்டுபிடிக்கும். சர்க்கரை நோய் மற்றும் புற்று நோயைக் கண்டுபிடிப்பதற்கு இவைகள் விஞ்ஞானிகளுக்கு உதவியாக இருக்கின்றன. மற்ற வழிகளில் மனுக்குலத்திற்கு நாய்கள் பயனுள்ளதாக உள்ளது - மந்தையை மேய்ப்பதற்கு, மேய்ப்பவர்களுக்கு உதவியாகவும், வீடுகளை காவல் காக்கும் காவலாளர்களாகவும், உடல் ஊனமுற்றோருக்குப் பணிவிடையாளராகவும் உதவி செய்கின்றது. நாய்கள் மிகப் பிரபலமான செல்லப் பிராணிகளாகவும், மனிதனின் உற்ற சிநேகிதனாகவும் அழைக்கப்படுகிறது.

ஒருவேளை மடியில் தன் நாயை வைத்துக்கொண்டு இதை நாம் சிந்திக்கும்போது, உண்மையான நாய்கள்போலவே புறஜாதிகள் அசுத்தமானவர்களாக எண்ணப்பட்டு யூதர்களால் விலக்கப்பட்டார்கள். புறஜாதிகளும் இந்த நெருக்கமானப் பாதையில் மனம் திரும்பிய யூதர்களோடு பரம அழைப்பின் பந்தயப் பொருளைப் பெறுவதற்கு இலக்கை நோக்கி தொடர்வதற்குச் சமமான உரிமையைப் பெற்றிருப்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும் (எபிரெயர் 12:1; 1 கொரிந்தியர் 9:24 காண்க). இப்பொழுது நாம் மிகுந்த ஆசீர்வாதங்களைப் பெற்றிருப்பதற்கான விலையேறப்பெற்ற நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு மிகவும் வாஞ்சையாக இருப்பவர்களிடம், எவ்வளவு அன்பாகவும், புரிந்துகொள்ளுதலோடும் இருக்க வேண்டும்! இப்பொழுதும், எப்பொழுதும் வேண்டுமானாலும் மற்றும் முக்கியமாக கிறிஸ்துவின் இராஜ்யத்தில் இவர்கள் போஷிப்பதற்கான சிறப்பான ஓர் உரிமையை நாம் பெற்றுள்ளோம். தேவனுடைய முழு மனுக்குலத்தை ஆசீர்வதிப்பதற்கான ஒரு முன்னறிவை அவர் நமக்குத் தந்ததற்காக நாம் அவரைப் போற்றிப் புகழ்வோம்!

### சத்தியத்தை ஞானமாகக் கையாளுதல்

# பன்றியிடமிருந்து பாடங்கள்



Graeme Smith

"உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்" (மத்தேயு 7:6).

இயேசுவின் சீஷர்களுக்கு மத்தேயு 7:6-ஆம் வசனத்தில் பதிவு செய்யப்பட்ட கட்டளையில், "முத்துக்கள்" என்பது என்னவென்றும், "பன்றிகள்" யார் என்றும் தீர்மானிப்பதற்கு அவசியம் ஏற்பட்டது.

சீஷர்கள் நியாயந்தீர்க்கப்படாமல் இருப்பதற்கு அவர்கள், "ஒருவரையும் நியாயந்தீர்க்கக்கூடாது" (மத்தேயு 7:1) என்பதற்கு அவர்கள் ஒருவரையும் தீர்ப்பிடக்கூடாது என்று பொருள். ஏனெனில் நம்முடைய தேவன் எந்த நேரத்திலும் யாருடைய கண்களையும் திறக்க ஆற்றல் உடையவராய் இருக்கிறார். இப்படியாக சாலொமோனின் வார்த்தைகளின் சிறப்பு காணப்படுகிறது. "ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள்" (நீதிமொழிகள் 4:7). இராஜ்யத்தில் சுவிசேஷத்தைப் பகிர்ந்துக்கொள்ள விரும்பும்போது கிறிஸ்தவர்கள், "முத்துக்களைப் பன்றிகள் முன் போடாதீர்கள்" என்ற கிறிஸ்துவின் கட்டளைகளைக் கவனிக்க வேண்டும். இந்த வசனப்பகுதியிலுள்ள இயேசுவின் கட்டளைகளிலிருந்து நாம் என்னப் பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும்?

**பன்றி:**

நியாயப்பிரமாணத்தின் கீழ் இஸ்ரயேலுக்குப் புசிக்கக்கூடிய மிருகங்கள் மற்றும் புசிக்கக்கூடாத மிருகங்களைப் பொறுத்தவரையில் பன்றிக்கான கட்டளைகள் கொடுக்கப்பட்டது. "கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: நீங்கள் இஸ்ரயேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், பூமியிலிருக்கிற சகல மிருகங்களிலும் நீங்கள் புசிக்கத்தக்க ஜீவஜந்துக்கள் யாதெனில்: மிருகங்களில் விரிகுளம்புள்ளதாயிருந்து, குளம்புகள் இரண்டாகப் பிரிந்திருக்கிறதும் அசைபோடுகிறது மானவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம். ஆனாலும், அசைபோடுகிறதும் விரிகுளம்புள்ளது மானவைகளில் ஒட்டகமானது அசைபோடுகிறதாய் இருந்தாலும், அதற்கு விரிகுளம்பில்லாதபடியால், அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும். குழிமுசலானது அசைபோடுகிறதாயிருந்தாலும். அதற்கு விரிகுளம்பில்லை; அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும். முயலானது அசைபோடுகிறதாயிருந்தும், அதற்கு விரிகுளம்பில்லை; அது உங்களுக்கு அசுத்தமாயி ருக்கும். பன்றியின் குளம்பு விரிகுளம்பும் இரண்டாக பிரிந்ததுமாய் இருந்தும், அது அசைபோடாது; அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும். இவைகளின் மாம்சத்தைப் புசிக்கவும், இவைகளின் உடல்களைத் தொடவும் வேண்டாம்; இவைகள் உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது" (லேவியராகமம் 11:1-8). விரிகுளம்புள்ள மற்றும் அசைபோடும் மிருகங்களை மட்டுமே இஸ்ரயேலர்கள் புசிப்பதற்கு தேவன் அனுமதி கொடுத்திருக்கிறார். இந்த இரண்டுஅடிப்படையான கட்டளைகளையும் அவசியமாகக் கடைபிடிக்க வேண்டும்,

இந்தக் குறிப்புகளைக் காணும்போது, விரிகுளம்புள்ளவைகளுக்கும், அசைபோடும் மிருகங்களுக்கும் சில முக்கியத்துவம் இருப்பதாகக் கருதப்படுகிறது. ஆயினும் மற்ற மிருகங்களைக் காட்டிலும் இந்த இரண்டு குணலட்சணங்களைக்கொண்ட மிருகங்கள் மத்தியில் அங்கீகரிப்பைப் பெற்றதற்கான முக்கியத்துவத்தை எந்த வசனங்களும் ஆழமாக விவரிப்பதில்லை. இப்படியாக தங்களுடைய நியாயத்தீர்ப்புக்கு அடித்தளமாக எந்த ஆவிக்குரிய கோட்பாடுகளையும் இஸ்ரயேலர்கள் பெறவில்லை. தேவனுடைய கட்டளைகளுக்கு உடன்பட வேண்டும் என்ற ஒரே விருப்பமுடையவர்களாக இருந்தார்கள்.

பன்றிகள் அசுத்தமானவைகள் என்று உறுதிப்படுத்திக்கொள்ள வசனங்களில் மேலும் நான்கு பகுதிகளில் காணலாம்.

- "மதிகேடாய் நடக்கிற அழகுள்ள ஸ்திரீ, பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்குச் சமானம்" (நீதிமொழிகள் 11:22). தன் விருப்பம்போல்

வாழக்கூடிய ஸ்திரீ அசுத்தமானவள் என்று அடையாளங்காட்டுவதற்கு, அசுத்தமான பன்றி அடையாளமாக எடுத்துக்காட்டாகக் காண்பிக்கப் படுகிறது.

• "என்னைக்குறித்து விசாரித்துக் கேளாதிருந்தவர்களாலே தேடப்பட்டேன்; என்னைத் தேடாதிருந்தவர்களாலே கண்டறியப்பட்டேன்; என்னுடைய நாமம் விளங்காதிருந்த ஜாதியை நோக்கி: இதோ, இங்கே இருக்கிறேன் என்றேன். நலமல்லாத வழியிலே தங்கள் நினைவுகளின்படி நடக்கிற முரட்டாட்டமான ஜனத்தண்டைக்கு நான் முழுதும் என் கைகளை நீட்டினேன். அந்த ஜனங்கள் என் சந்நிதியிலே நித்தம் எனக்குக் கோபமுண்டாக்கி, தோட்டங்களிலே பலியிட்டு, செங்கற்களின்மேல் தூபங்காட்டி, பிரேதக்குழிகளண்டையில் உட்கார்ந்து, பாழான ஸ்தலங்களில் இராத்தங்கி, பன்றியிறைச்சியைத் தின்று, தங்கள் பாத்திரங்களில் அருவருப்பானவைகளின் ஆணத்தை வைத்திருந்தார்கள்" (ஏசாயா 65:1-4). இஸ்ரயேல் ஜனங்கள் பன்றி இறைச்சியைப் புசிப்பதே கலகக்காரர்களாக இருந்ததற்கான ஒரு முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

• "மாட்டை வெட்டுகிறவன் மனுஷனைக் கொல்லுகிறவனாகவும், ஆட்டைப்பலியிடுகிறவன் நாயைக் கழுத்தறுக்கிறவனாகவும், காணிக் கையைப் படைக்கிறவன் பன்றி இரத்தத்தைப் படைக்கிறவனாகவும், தூபங்காட்டுகிறவன் விக்கிரகத்தை ஸ்தோத்திரிக்கிறவனாகவும் இருக்கிறான்; இவர்கள் தங்கள் வழிகளையே தெரிந்துகொள்ளுகிறார்கள்; இவர்களுடைய ஆத்துமா தங்கள் அருவருப்புகளின்மேல் விருப்பமாயிருக்கிறது" (ஏசாயா 66:3). பன்றியின் இரத்தத்தைப் படைப்பது தேவனுக்கு அருவருப்பானது என்று இந்த வசனப் பகுதி விவரிக்கிறது.

• "தங்களைத்தாங்களே பரிசுத்தப்படுத்திக் கொள்ளுகிறவர்களும், தோப்புகளின் நடுவிலே தங்களைத் தாங்களே ஒருவர்பின் ஒருவராய்ச் சுத்திகரித்துக்கொள்ளுகிறவர்களும், பன்றியிறைச்சியையும், அருவருப்பானதையும், எலியையும் சாப்பிடுகிறவர்களும் ஏகமாய்ச் சங்கரிக்கப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசாயா 66:17). மீண்டுமாகப் பன்றியின் இறைச்சியைப் புசிப்பது அருவருப்பானது என்று கருதப்படுகிறது.

**இயல்பான குணங்கள்:**

பன்றிகள் அசுத்தமானவைகள் என்று தேவன் வகைப்படுத்தின கோட்பாட்டைப் பொறுத்த வரையில் எந்தவிதமான ஆவிக்குரிய விளக்கம் இல்லாதபோதிலும், அதன் இயல்பான குணங்கள் தேவனுடைய இந்தச் சட்டங்களுக்கு உண்டான காரணங்களின் மீது வெளிச்சம் வீசலாம். மூன்று குணங்கள் இதற்குப் பொறுத்தமாகக் காணப்படலாம். அவைகளின் உணவுமுறை, கால்களின் கீழ் மிதித்துப்போடும் மனப்பாங்கு, மற்ற பாடப்பகுதியில் விவரிக்கப்பட்டதுபோல மற்றவர்களைப் பீறிப்போடும் குணம்.

மனுஷரால் உட்கொள்ளக்கூடிய பெரும்பாலான எல்லா உணவு வகைகளையும் பன்றிகள் உண்ணும். காய்கறிகள், மாம்சத்தின் மீதி பகுதிகள், (வீட்டில் மீதியுள்ள உணவு பொருட்கள்), சில நேரங்களில் மனிதனுக்கு விஷமாக இருக்கும் உணவுகளையும் பன்றி புசிப்பதினால் அதன் மாம்சத்தைப் புசிப்பது விஷமாக இருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

பன்றிகளின் உருவளவைப் பார்க்கும்போது, அதற்குச் சரீர பிண்டம் அதிகமாக உள்ளது. அவைகளில் பாத அச்சு மிகக்குறைவாக உள்ளதால், தரையில் அதிகமான அழுத்தத்தை உண்டுபண்ணி அவைகள் நடக்கும் பாதையில் உள்ளவைகளை மிதித்து நொறுக்கிப்போடும். கூடுதலாக அவைகளின் கால் அச்சுகளின் கீழுள்ள அழுத்தத்தினால் பெரும்பாலும் தரையும் தூளாக நொறுங்கும். அவைகளின்மேலுள்ள பொருட்கள் மிதிபட்டுப், புதைந்து, தொலைந்துவிடுகிறது. "மிதித்து" என்ற வார்த்தை அர்த்தமுடையது. இதைக்குறித்து பிற்பாடு காணலாம்.

ஈரமாக இருக்கும்போது நிலம் சேறாகும். பன்றிக்கு வேர்வை சுரப்பிகள் இல்லாததினால் இவை சேற்றில் புரண்டு தங்களைக் குளிர்ச்சியாக்கிக் கொள்ளும் (வேர்வை சுரப்பியுள்ள மிருகங்கள் சேற்றில் புரள வேண்டிய அவசியமில்லை). இதன் காரணமாக பன்றிகள் அசுத்தமானவைகள் என்று கருதப்படுகிறது.

நம்முடைய வேதப்பகுதியில் "கிழித்து" என்பதற்கான அர்த்தத்தில் எந்தவிதமான மாற்றுப் பொருளுமில்லை. இதற்குத் துண்டுதுண்டாகக் கிழித்தல் என்று பொருள். சில மிருகங்கள் தங்களுடைய இரையைப் புசிப்பதோடு இவை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பன்றி மற்ற மிருகங்களின் பிணத்தைக் கிழித்து, அதற்குப் பின் அந்தத் துண்டுகளை விழுங்கும். இதற்காக இவைகள் தங்களுடைய இரையைக் கிழிக்கிறது.

**பன்றிகளுக்குள் பிசாசுகள்:**

ஆண்டவராம் இயேசு அசுத்தமான பிசாசுகளை ஒரு மனுஷனைவிட்டு பன்றிகளுக்குள் விரட்டியதால் பன்றிகள் முற்றிலுமாக வெறுத்து ஒதுக்கக்கூடியவைகள் என்ற சிந்தனையை வலுப்படுத்துகிறது. "பின்பு அவர்கள் கடலுக்கு அக்கரையிலுள்ள கதரேனருடைய நாட்டில் வந்தார்கள். அவர் படவிலிருந்து இறங்கினவுடனே, அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் பிரேதக்கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான் ... அவன் இயேசுவைத் தூரத்திலே கண்டபோது, ஓடிவந்து, அவரைப் பணிந்துகொண்டு: இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாத படிக்குத் தேவன்பேரில் உமக்கு ஆணையென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். ஏனெனில் அவர் அவனை நோக்கி: அசுத்த ஆவியே, இந்த மனுஷனை விட்டுப் புறப்பட்டுப் போ என்று சொல்லியிருந்தார் ... அப்பொழுது, அவ்விடத்தில் மலையருகே அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்தது. அந்தப் பிசாசுகளெல்லாம் அவரை நோக்கி: பன்றிகளுக்குள்ளே போகும்படி, அவைகளுக்குள்ளே எங்களை அனுப்பும் என்று அவரை வேண்டிக்கொண்டன. இயேசு அவைகளுக்கு உத்தரவு கொடுத்தவுடனே, அசுத்த ஆவிகள் புறப்பட்டுப் பன்றிகளுக்குள் போயின; உடனே ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளுள்ள அந்தக் கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து ஓடி, கடலிலே பாய்ந்து, கடலில் அமிழ்ந்து மாண்டது. பன்றிகளை மேய்த்தவர்கள் ஓடி, இதைப் பட்டணத்திலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள் ... அப்பொழுது சம்பவித்ததைப் பார்க்கும்படி ஜனங்கள் புறப்பட்டு; இயேசுவினிடத்தில் வந்து, லேகியோனாகிய பிசாசுகள் பிடித்திருந்தவன் வஸ்திரந்தரித்து, உட்கார்ந்து, புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு, பயந்தார்கள். பிசாசுகள் பிடித்திருந்தவனுக்கும் பன்றிகளுக்கும் சம்பவித்ததைக் கண்டவர்களும் அவர்களுக்கு விவரமாய்ச் சொன்னார்கள்" (மாற்கு 5:1-16). இப்படியாக சொல்லர்த்தமாகவே பன்றிகள், "பிசாசுகளின் குடியிருப்பாக" இருந்தது.

**பன்றி மேய்த்தல்:**

ஊதாரி குமாரன் இகழ்ச்சிக்குரிய பன்றியின் வாழ்க்கை முறையை அடைந்ததே மற்றொரு எடுத்துக்காட்டாகும். "பின்னும் அவர் சொன்னது: ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொடுத்தான். சில நாளைக்குப்பின்பு, இளையமகன் எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு, தூரதேசத்துக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான். எல்லாவற்யைும் அவன் செலவழித்தபின்பு அந்தத் தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத்தொடங்கி, அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான். அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை" (லூக்கா 15:11-16). அந்த மனுஷனின் தாழ்வான நிலையானது அவன் கடைசியாக செய்த இழிவான வேலையைப் பிரதிபலிக்கிறது. பன்றியை மேய்த்தது - அவைகள் உண்ணும் உணவைப் புசிப்பதற்கு ஆயத்தமானது.

**முத்துக்கள்:**

இந்த உலகத்தில் முத்துக்கள் விலையேறப்பெற்றது. ஆனால் அவைகளைப்பற்றி பன்றிகளுக்குத் தெரியாது. இராஜ்யத்தின் சுவிசேஷம் வசனங்களில் ஒரு முத்துக்கு ஒப்பிட்டுப் பேசப்படுகிறது. "மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான

எல்லாவற்யையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்" (மத்தேயு 13:45-46).

முத்தான சத்தியத்தின் மதிப்பை அறியாதவர்கள் விலையேறப்பெற்ற முத்துக்களின் மதிப்பை அறியாத பன்றிகளைப் போலிருக்கிறார்கள். முத்துக்கள், பன்றிகள் புசிப்பதற்குத் தகுதியற்ற உணவாக இருப்பதால், அவைகள் அதைத் தரையிலே தள்ளி அவைகளைப் பீறிப்போடும். இப்படியாக பன்றிகளுக்கு முன் முத்தான சத்தியங்களைப் போடாதீர்கள், ஏனெனில் அவைகள் அந்த முத்துக்களை உண்ணத்தகாதவைகள் என்றும், விரும்பத்தகாதது என்றும் உடனடியாக எண்ணுவார்கள் என்ற ஒரு முக்கியமான பாடம் கிறிஸ்தவர்களுக்குக் காணப்படுகிறது. ஆகவே அவைகள் முத்துக்களை வெளியே எறிந்து தரையிலே தள்ளி மிதித்து சத்தியத்தை இகழ்ந்து அவமதிப்பார்கள் (மத்தேயு 7:6).

முத்துக்களின் மதிப்பை உணர்ந்துகொள்ள முடியாதவர்களுக்கு முன் அவைகளை நாம் போட்டால், அதின் விளைவாக நாம் சத்தியத்தை அவமதிப்பதை அனுமதிப்பது மட்டுமல்ல, இன்னும் சில விளைவுகளை நாம் சந்திக்க வேண்டியதாக இருக்கும். முத்துக்கள் தங்களுடைய பசியைப் போக்காததினால், அவைகளுக்கு முன் முத்துக்களை வீசினவர்களிடமாகத் திரும்பி அவர்களையும் பீறிப்போடும். அதுபோல சத்தியத்தைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள் கோபங்கொண்டவர்களாக, அந்தச் செய்தியையும், அதைக் கொடுத்தவர்களையும் வேண்டுமென்றே அவமானப்படுத்துவார்கள். ஒரு கிறிஸ்தவன் முத்தான சத்தியங்களைக்குறித்து அவமானத்தினால் வெட்கப்படக்கூடாததுபோல, சத்தியத்தை வேண்டுமென்றே இழிவு படுத்துவதற்கு அனுமதிப்பதும் கூடாத காரியமாகும். "சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்" (மத்தேயு 10:16) என்று இயேசு சொன்னதுபோல நாம் இருக்க வேண்டும்.

**தொகுப்பு:**


கிறிஸ்தவர்களாக இருக்கும் நாம், சத்தியம் ஏற்றுக்கொள்ளப்படாதபோது, அவைகள் ஏற்றுக்கொள்ள ஆயத்தப்படாமல் இருப்பவரைக் கட்டாயப்படுத்துவதற்கு முயற்சிக்கக்கூடாது என்று நாம் எப்பொழுதும் கவனத்தில்கொள்ள வேண்டும். முன்னதாக நாம் பார்த்தபடி ஒருவர், "பன்றியாகவே" இருந்துவிடுவார் என்று நாம் தீர்மானிக்க முடியாது, ஆனால் நீதியின்மேல் பசி தாகம் உள்ளவர்களோடு முத்தான சத்தியங்களை ஞானமாகப் பகிர்ந்துக்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்" (மத்தேயு 5:6).

இப்படியாக, "நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடக்க" (எபேசியர் 5:15) கிறிஸ்தவர்கள் எச்சரிக்கப் படுகிறார்கள். பன்றி மற்றும் முத்துக்களின் எடுத்துக்காட்டிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் இந்த அறிவுரையினால் பலப்படுத்தப்படுகிறது.

**ஊசியின் காதின் வழியாக?**

# வேதாகமத்தில் ஒட்டகங்கள்

"மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" (மத்தேயு 19:24).



Mike Ensley

ஒட்டகம் ஒரு கவர்ச்சியான சிருஷ்டிப்பு. கடுமையான வனாந்தரங்களில் ஜனங்களை சேவிக்கும்படியாக தேவன் அவைகளை விசேஷித்த விதமாக வடிவமைத்திருக்கிறார். கழுதைகள், குதிரைகள் போன்ற மற்ற பொதி சுமக்கும் மிருகங்கள் உயிர் பிழைப்பதற்குக் கடினமான சூழ்நிலையிலும், ஒட்டகங்கள் உயிர்வாழக்கூடிய தனித்துவமான பல குணங்களைப் பெற்றுள்ளது.

எடுத்துக்காட்டாக, ஒரு ஒட்டகம் மூச்சு விடும்போது, நீராவியை தன்னுடைய நாசிக்குள் அகப்படுத்தி, தன்னுடைய சரீரத்திற்குள் ஈர்த்துக்கொள்ளும். அதனுடைய கனமான மேலுறை பாலைவன வெப்பத்திலிருந்து பாதுகாக்கிறது. ஒட்டகத்தின் இரத்தம்கூட மற்ற பாலூட்டிகளைப் போலிராமல், கடுமைமிக்க நீர் பற்றா நேரத்திலும் தடையின்றி இரத்த ஓட்டம் காணப்படுகின்றது. வேர்வையினால் 25% ஒட்டகம் தன்னுடைய இடை இழப்பைத் தாங்கும் (11-13% மற்ற பாலூட்டிகளைக் காட்டிலும் அதிகமாக).

தண்ணீரை சிறப்பாகப் பயன்படுத்தக்கூடிய ஒட்டகத்தின் தன்மை ஒரு பகுதி மட்டுமே. மற்ற மிருகங்களைக் காட்டிலும் அதிகமான தண்ணீரைச் சேகரிக்கும் ஆற்றலுடையது. 1300 பவுண்ட் எடையுள்ள ஒட்டகம் 53 காலன்ஸ் (gallons) (200 லிட்டர்) தண்ணீரை மூன்று நிமிடங்களுக்குள் குடித்துவிடும். ஆதியாகமம் 24-ஆம் அதிகாரத்தில், ஆபிரகாம் தன்னுடைய குமாரனாகிய ஈசாக்குக்கு ஒரு பெண்ணைக்கொள்ளும்படி தன்னுடைய ஊழியக்காரரைப் பத்து ஒட்டகங்களோடு தன்னுடைய தேசத்திற்கு அனுப்பினதை நாம் மீண்டும் நினைவுபடுத்திக்கொள்ளலாம். அவருடைய மனுஷருக்கும், ஒட்டகங்களுக்கும் தண்ணீர் கொடுக்கும்படி ரெபெக்காள் மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டாள். அவள் கிட்டத்தட்ட 500 காலன்ஸ் (1892 லிட்டர்) தண்ணீரை இரைத்திருக்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஒட்டகங்கள் செல்லப் பிராணிகளாகக் கருதப்பட்டது. அக்காலத்தில் ஒருவருடைய சொத்துக்கள் அதற்குரிய கால்நடைகளைக்கொண்டு கணக்கிடப்பட்டது. இதில் ஒட்டகங்களும் அடங்கும் (ஆதியாகமம் 12:16, 24:35; யோபு 1:3, 42:12). தனிப்பட்ட முறையில் ஒட்டகங்கள் போக்கு வரத்துக்கும், சரக்கு ஏற்றுவதற்கும், சவாரி செய்வதற்கும், பயன்படுத்தப்பட்டது. பசுவைப்போல ஒட்டகங்களிலிருந்தும் பால் கறக்கப்பட்டது (ஆதியாகமம் 32:15).

பழைய ஏற்பாட்டில் ஒட்டகங்கள் ஐம்பத்து மூன்றுமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டகங்கள் முக்கியமானவைகளாகக் கருதப்பட்டாலும், ஆறுமுறை மட்டுமே புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்தேயு 3:4 மற்றும் மாற்கு 1:6-ஆம் வசனங்களில் இவைகள் யோவான் ஸ்நானனின் உடையில் (ஒட்டக மயிர்) குறிப்பிடப்பட்டுள்ளது. மற்ற நான்கு குறிப்புகளும் நம்முடைய ஆண்டவராம் இயேசு சொன்னவைகள். ஒருமுறை உருவகமாக இயேசு ஒட்டகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ! ... குருடரான வழிகாட்டிகளே, கொசு இல்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாய் இருக்கிறீர்கள்" (மத்தேயு 23:23, 24)!

பரிசேயர்களும், வேதபாரகர்களும் நியாயப்பிரமாணத்தில் வெந்தயத்திலும், சீரகத்திலும் தசமபாகம் கொடுப்பதுபோன்ற, சிறிய அம்சங்களையும் இணங்கி செயலாற்றுவதற்குக் கருத்துள்ளவர்களாக இருந்தாலும் மிக முக்கியமாக அவர்களைச் சுற்றியிருப்பவர்களின் தேவைக்கேற்ற இரக்கம் மற்றும் பரிவு காட்டுவதற்கு அவர்கள் தவறிவிடுவதாக இயேசு கூறுகிறார்.

இந்த ஒப்புமையில் நம் ஆண்டவர் கொசு மற்றும் ஒட்டகமாகிய அவரது பார்வையாளர்கள் நன்கு அறிந்த முற்றிலுமான முரண்பாடுள்ள இரு உயிரினங்களைப் பயன்படுத்தியுள்ளார். ஜனங்களுக்கு அறிமுகமான உயிரினங்களுள் கொசு மிகச் சிறிய

ஜீவியாகும், பார்க்கக்கூட அரிதான ஜீவியாகும். இது பிதாவாகிய தேவனின் பார்வைக்கு மிகச் சிறிய காரியமாக இருக்கும். வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் ஜனங்களின் தோற்றத்திலிருந்து தசமபாகம் பெருஞ்செயலுக்கு இயேசு ஒப்பாகுகிறார். ஒட்டகம் மிகப் பெரிய ஜீவியாகவும், இதனை வேதபாரகர் மற்றும் பரிசேயரின் ஜனங்கள் மீது இரக்கம் மற்றும் கருணைக் காட்ட விரும்பங்கொள்ளாத தன்மைக்கு நம் ஆண்டவர் நற்சாட்சி கூறுகிறார். இயேசுவினால் பல இடங்களில் பல முறைகளில் வெளிப்படுத்தப்பட்ட இந்தக் குணங்களை தேவன் மிக முக்கியமாகக் கவனிக்கிறார்.

புதிய ஏற்பாட்டில் ஒட்டகங்களைப்பற்றிய மற்ற குறிப்புகளும் மூன்று வெவ்வேறு இடங்களில் காண்பிக்கப்படும் ஒரே சம்பவமாகும் மத்தேயு 19:24; மாற்கு 10:25 மற்றும் லூக்கா 18:25. இந்தச் சம்பவத்தில், வாலிபரான ஐசுவரியமுள்ள அந்த ஆளுநர் இயேசுவிடம் வந்து, "நித்திய ஜீவனை சுதந்தரிக்கும்படியாக நான் என்னச் செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

"பிள்ளைகளே, ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது! ஐசுவரியவான் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" (மாற்கு 10: 24-25) என்ற இயேசுவின் வார்த்தைகளைக் கண்டு சீஷர்கள் வியப்படைந்தார்கள்.

முன்னதாகவே மத்தேயு 23:24-ஆம் வசனங்களில் சொல்லப்பட்டதற்கு ஒத்த ஒரு உருவகத்தை இயேசு இங்குப் பயன்படுத்தினார். இந்தச் சூழ்நிலையில் இயேசு பெரிய மிருகத்தை, ஊசியின் காதுக்கு வேறுபடுத்திப் பேசினார். அவரைக் கவனித்துக்கொண்டிருந்தவர்களுக்கு மிகச் சிறிய இந்தத் துவாரம் பழக்கமானதாக இருந்திருக்க வேண்டும். ஐசுவரியமுள்ள மனுஷன் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பதைக் காட்டிலும் மிகப்பெரிய மிருகஜீவனான ஒட்டகமானது ஊசியின் காதில் நுழைவது எளிதாயிருக்கும் என்று இயேசு கூறினார். மனித சொற்படி ஒட்டகம் இந்த அருஞ்செயலைச் செய்ய இயலாது.

"மனுஷரால் இது கூடாததுதான், தேவனால் இதுகூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும்" (மாற்கு 10:27) என்று இயேசு கூறினார். தேவனால் மிகப்பெரிய ஒட்டகமும் ஊசியின் காதின் வழியாகப் பிரவேசிக்கக்கூடும். ஏழைகள் மட்டுமல்ல ஐசுவரியவான்களும் முழுமனுக்குலமும் தங்களுடைய சிருஷ்டிகரோடு மீண்டும் நல்லுறவுகொள்வதற்கு தேவன் வாய்ப்பளிப்பார் (1 தீமோத்தேயு 4:10; 1 யோவான் 2:2). பலருடைய மத கோட்பாட்டில் இது சாத்தியமில்லாதது. மனுஷருடைய விசுவாசத்தினால் மனுக்குலத்தில் அதிகப்பட்சமானவர்கள், இந்த வாழ்க்கையில் அவிசுவாசிகளாக தொலைந்திருக்கிறார்கள். ஆனால் தேவனால் **எல்லாம்** கூடும் (மத்தேயு 19:26; அப்போஸ்தலர் 24:15). எவ்வளவு அற்புதமுள்ள தேவனை நாம் பெற்றுள்ளோம்!

சகோதரர் ரஸல் அவருடைய மறுபதிப்புகளில் (R5465 மற்றும் R3844) ஊசியின் காது நுழைவாயின் பாரம்பரியத்தை தொடர்புபடுத்திப் பேசுகிறார். இரவில் எருசலேமுக்குள் நுழையும் பெரிய வாசல் கதவு அடைப்பட்டப் பின் காலதாமதமாக வரும் பயணிகளுக்கு, "ஊசி காது" என்று அழைக்கப்படும் சிறிய வாசல்கள் திறந்திருக்கும். பாரஞ்சுமந்துக்கொண்டுவரும் ஒட்டகங்கள் இந்தச் சிறிய வாசல்களுக்குள் நுழைவது கடினமாக இருந்தது. ஆனால் ஒட்டகங்களின் சுமைகள் இறக்கப்பட்டப் பின் அந்த ஒட்டகங்கள் அமர்ந்து அதன் மூட்டுகளினால் தவழ்ந்து எளிதில் நுழைய முடியும் என்பதே அந்தக் கருத்தாகும்.

ஐசுவரியவானாகிய அந்த வாலிபனின் சம்பவத்தில் நம்முடைய ஆண்டவரின் உபதேசத்திற்கு ஓர் அற்புதமான எடுத்துக்காட்டாகத் தோன்றுகிறது. தன்னுடைய முதுகில் சுமைகளைச் சுமந்து நிற்கக்கூடிய ஒட்டகம் பட்டணத்திற்குள் நுழைய இயலாததுபோல, தன்னுடைய பலமுள்ள உலக சரக்குகளைப் பெருமையோடு சுமந்து நிற்கக்கூடிய ஐசுவரியவான்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது. ஒட்டகம் நகரத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமானால் தன்னுடைய மூட்டுகளில் அமர்ந்து, தாழ்மையுள்ள நிலைக்குத் தன்னை உட்படுத்த வேண்டும். அதற்குப் பின் அந்த ஒட்டகம் அதே தாழ்மையுள்ள நிலையில்

தன்னுடைய முட்டுகளில் நகர்ந்து அந்தச் சிறிய வாசல் வழியாகப் பட்டணத்தின் சந்தோஷத்திற்குள் பிரவேசிக்கலாம். அதுபோல நம்முடைய ஆண்டவரின் ஆசீர்வாதங்களைப் பெற விருப்பம் உள்ளவர்கள், அவருக்கு முன் தாழ்த்த வேண்டும். நமக்குள்ள அனைத்தையும் அவரிடம் அர்ப்பணிக்க வேண்டும். இப்படியாக ஒரு காலத்தில் நமக்கு விலையேறப்பெற்றதாக இருந்த உலகத்தின் பாரங்களை அகற்ற வேண்டும். அதற்குப் பின், "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி (மத்தேயு 25:21) என்ற சத்தம் கேட்கும்வரையில், நாம் பலியின் இடுக்கமான வழியில் செல்லலாம்.


இது ஒரு அருமையான ஒப்புமையாகக் காணப்படுகிறது. ஆயினும் எருசலேமின் சம்பவத்தில் ஊசி காது என்று அழைக்கப்படும் சிறிய கதவைத் தட்டிய காரியம், வேத புலவர்கள் மத்தியில் ஆதரவை இழந்துள்ளது. இப்படிப்பட்ட ஒரு வாசல் இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லை. இக்காரியம் ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன் காணப்பட்டதாக ஆரம்ப கால எழுத்துக்கள் கருதுகிறது. மனுஷருடைய பெருமுயற்சிகளினால் இரட்சிப்பு சாத்தியமில்லை என்பது நம்முடைய ஆண்டவரின் கருத்தாய் இருந்தது. மாற்கு 10:27-ஆம் வசனத்தில் வாசிக்கிறபடி, இக்காரியத்தைக்குறித்து இயேசு தம்முடைய சொந்தத் தீர்மானத்தை ஸ்தாபித்துள்ளார். "மனுஷரால் இது கூடாததுதான், தேவனால் இதுகூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும்" (மாற்கு 10:27).

திரைக்கு இப்பக்கத்திலுள்ள நம்முடைய புனித யாத்திரைக்கும் ஒட்டகம் ஒரு உருவகமாக இருக்கலாம். ஒட்டகத்தின் ஒரு தனித்துவமான குணங்கள் நம்முடைய கிறிஸ்தவ நடையின் மூலக்கூறுகளை விவரிக்கிறது.

வனாந்தர மணலில் சோர்வடைய செய்யும் அனலானது தாக்காதபடிக்கு ஒட்டகத்திற்கு உயரமான கால்கள் உண்டு (158 டிகிரி F வரையில்). நாம் பரிசுத்த ஆவியால் இந்த உலகத்தின் அசுத்தமான பாதிப்புகளுக்குமேலாக நம்முடைய புனித பயணத்தைத் தொடருகிறோம். வனாந்தர பயணத்தின் போது, ஒட்டகம் அதிகப்பட்சமான தண்ணீரை சேமித்து வைப்பதுபோல, இடுக்கமான வழியில் நம்முடைய ஆவிக்குரிய பயணத்தில் தேவனுடைய வார்த்தைகளில் மிக அருமையான (அழகான) சத்தியங்களில் மகிழ்ந்து களிகூரும்படிக்கு பரிசுத்த ஆவி நம்மை அனுமதிக்கிறது. தனித்துவமான ஒட்டகத்தின் சரீர அமைப்பு கடுமையான வனாந்தர அனலிலும் ஜீவிப்பதற்கு அவை அனுமதிப்பதுபோல, நாமும் கடுமையான சூழ்நிலையில் ஒரு, "தனி இயல்புள்ள ஜனங்களாக" வாழ்ந்துகொண்டு இருக்கிறோம் (1 பேதுரு 2:9). நாம் இந்த உலகத்தின் காரியங்களில் ஊக்குவிக்கப்படாதபடிக்கு தனி இயல்புள்ளவர்களாக இருக்கிறோம். நம்முடைய பரலோக தந்தை பிரியப்படுத்தும்படி நாம் உயர்ந்த பேரார்வம் கொண்டிருக்கிறோம். நாம் விசுவாசத்தோடு இருந்தால், இந்தப் பூமியின் குடும்பங்களை ஆசீர்வதிப்போம் என்ற இராஜ்யத்திற்குரிய நம்பிக்கை மற்றும் நம்புவதற்கரிய வாக்குத்தத்தினால் நாம் ஊக்குவிக்கப்படுகிறோம்,

சுறுசுறுப்பு மற்றும் ஒற்றுமை

# எறும்பைக் கவனித்தல்



Chris Kuenzli

"சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள். அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புகாலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்துவைக்கும்" (நீதிமொழிகள் 6:6-8).

நம்முடைய கவனத்தை சாலொமோன் மேற்கூறப்பட்ட பகுதியில் எறும்பினிடம் திருப்புகிறார். அவர் எறும்பின் வேலையின் நெறிமுறையைக் குறிப்பிடுகிறார். தங்களுடைய நேரத்தை வீணாக்குபவர்களை இந்தச் சிறிய ஜீவன் எத்தகைய ஆற்றல், வல்லமை உள்ளதென்று கவனிக்க கூறுகிறார். மீண்டும் அவர் நீதிமொழிகள் 30:25-ஆம் வசனத்தில் எறும்பைப்பற்றிக் குறிப்பிடுகிறார். "அற்பமான ஜந்துவாயிருந்தும், கோடைகாலத்திலே தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்கிற எறும்பும்." சாலொமோன் கருதுகிறபடி எறும்பின் எடுத்துக்காட்டிலுள்ள ஞானத்தை நாம் கருத்தில் கொண்டு, நமக்குப் பொருந்தக்கூடிய ஆவிக்குரிய பாடங்களைப் பார்க்கலாம்.

**பின்னணி:**

இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டு வெவ்வேறாக வகை பிரிக்கப்பட்ட எறும்பு வகைகள் 12,500-ஐ மிஞ்சுகிறது. பலவிதமாக வாழும் நிலைகளின் கீழ் இந்தச் சிருஷ்டிகள் பூமியின் மேலுள்ள எல்லா நிலங்களிலும் காணப்படுகிறது. எறும்புகள் கூடி தனிக்கூட்டமைப்பில் வாழும். இந்தத் தனி குடியமைப்புகள் வெவ்வேறு அளவுகளைக்கொண்டுள்ளது. மிகச்சிறிய அளவிலிருந்து (சில டஜன் எறும்புகள்), மிகப் பெரிய அளவு (மில்லியன் கணக்கான) வரையில் காணலாம். எறும்புகள் கூட்டமாக வாழும் பூச்சிகள். அதன் தனி குடியமைப்புகளுக்குத் தனிப்பட்ட வகையில், சத்தம், தொடு உணர்வு மற்றும் வாசனையினால் ஒன்றோடொன்று தொடர்பு கொள்கிறது. அதிகப்பட்சமான எறும்பு குடியமைப்பில் தனித்துவமான வேலைகளைச் செய்யும். பலவிதமான எறும்புகள் வேலைகளினிமித்தம் பிரித்து ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளது. எறும்புகளின் கூட்டம் மற்றும் நிர்வாகத்தின் கூட்டமைப்பு மற்றும் அவர்களின் தனி குடியமைப்பு, அவைகளை ஆராய நம்மை ஈர்க்கிறது.

**வாய்ப்புகள் உள்ள போது வேலை செய்யுங்கள்:**

எறும்புகளின் வேலை நெறிகள், நீண்ட காலமாகப் பாராட்டப்படுகிறது. எறும்பின் செயல் திறமைப்பற்றி ஈசோப்பு தன்னுடைய கதைகளில் ஒன்றில் - எறும்பும், வெட்டுக்கிளியும் பற்றிக் குறிப்பிடுகிறார். அந்தக் கதையில் வெட்டுக்கிளி வெயில் காலத்திலும், அறுவடை காலத்திலும் பாடிக்கொண்டிருந்தது. அதே நேரத்தில் எறும்பு, சுறுசுறுப்பாக உணவுகளை மழை காலத்திற்காகச் சேகரித்துக்கொண்டிருந்தது. கொடூரமான மழை காலம் வந்தபோது, தான் சேர்த்து வைத்த உணவுகளோடு தன்னுடைய கூட்டில் எறும்பு ஓய்வெடுத்துக்கொண்டிருந்தது. வெட்டுக்கிளியோ என்றால் உணவில்லாமல் பட்டினியாக எறும்பினிடம் உணவுக்காக மன்றாடிக்கொண்டிருக்கும்போது, கோடை காலத்தில் நீ (வெட்டுக்கிளி) பாடிக்கொண்டிருந்ததினால் இந்த மழை கால முழுவதும் ஆடிக்கொண்டு இரு என்று எறும்பு பதிலளித்ததாகக் கூறப்படுகிறது. சுறுசுறுப்பு மற்றும் கடுமையான உழைப்பை இந்தக் கதை தெளிவாக முன்னிலைப்படுத்துகிறது. கோடை காலத்தில் எறும்புகளின் இந்தப் பண்புகளை சாலொமோன் கவனித்து, சோம்பேறியான மனுஷனுக்கு இந்த நீதியைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்று அறிவுரைக் கூறினார். ஒரு எறும்பு வசந்த காலத்தில் எழும்பும்போது, அதன் வருடாந்தர சுற்று துவங்குவதாக ஆராய்ச்சிகள் காட்டுகிறது. வசந்த காலம், கோடை காலம் மட்டும் அதைத் தொடர்ந்து வரும் மாதங்களில் உணவைச் சேகரித்துக்கொண்டு கூடுகளைப் பழுது பார்த்துக்கொண்டிருக்கும். மழை காலம் வரும்போது, அவைகள் இதை ஓய்வு என்று அழைக்கப்படும் அமைதியான ஒரு பகுதிக்குள் பிரவேசிக்கும், இது ஒருவகையான உறக்கம். தொடர்ந்து வரும் வசந்த காலத்தில், அவைகள் தங்களுடைய வேலைகளைத் திரும்பத் தொடரும்.

வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் எறும்புகள் வேலை செய்யும்.

எறும்பின் இந்தச் சுறுசுறுப்புள்ள குணம் நம்முடைய ஆண்டவர் கொடுத்த ஒரு பாடத்தை நமக்கு நினைப்பூட்டுகிறது. "பகற்காலமிருக்கு மட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது" (யோவான் 9:4) என்று இயேசு கூறியிருக்கிறார். எறும்பைப்போல இயேசுவும் தம்முடைய வாய்ப்பை அறிந்து கொண்டவராக அவருடைய முதலாம் வருகையின போது செய்ய வேண்டிய வேலைகளைச் செய்தார். இது தேவனுடைய வேலை என்று அறிந்திருந்தார் - "என்னை அனுப்பினவருடைய" - அவர் அதன் மேல் முழு கவனத்தையும் வைத்தவராக சுறுசுறுப்போடு நிறைவேற்றினார். அவருடைய வேலையைச் செய்து முடிப்பதற்கான நேரம் குறைவாக இருப்பதையும் அவர் உணர்ந்தார். ஆகவே எறும்பைப்போல அவர் சுறுசுறுப்போடே வேலைச் செய்து - அவருடைய சீஷர்களுக்கு ஊழியஞ்செய்தார் (யோவான் 17:6-8), குணமாக்குதல் மற்றும் அற்புதம் செய்தார் (லூக்கா 7:22) மற்றும் சிலுவையில் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினார் (பிலிப்பியர் 2:7-8). ஆண்டவருடைய அடிச்சுவடுகளை நாம் பின்பற்றுவதில் முக்கியமான வேலை நமக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. உடன்படிக்கையின் பிரதிக்கினையை நிறைவேற்றி (ரோமர் 12:1-2), நம்மை நாம் சுத்திகரித்து (யோவான்17:17; 1 தெசலோனிக்கேயர் 4:3-4) மற்றும் கிறிஸ்துவைப்போல குணங்களில் வளர்ச்சியடைய வேண்டும் (2 பேதுரு 1:4-8). இப்போதே நம்முடைய வாய்ப்பின் நேரம். மழைக்காலத்தில் இன்னும் அதிகமான உணவைச் சேகரிக்க முடியாமல் எறும்பு தன் வேலையை நிறுத்தும் காரியத்தை நம்முடைய நினைவுக்குக்கொண்டு வரலாம். இந்தச் சுவிசேஷ யுகத்தில் அறுவடையின் காலத்தில் கோதுமை மணிகளைக் கூட்டிச் சேர்ப்பதற்கு வேலை செய்து கொண்டிருக்கிறோம். இந்த வாய்ப்பு நிச்சயமாக நீடித்திராது. ஆகவே நாம் இந்த வாய்ப்பைப் பெற்றிருக்கும் வரையில் தொடர்ந்து சுறுசுறுப்பாக வேலை செய்வதற்கு ஊக்குவிக்கப்படலாம் (2 தீமோத்தேயு 2:15; கலாத்தியர் 6:9).

### ஒவ்வொருஅங்கத்தினருக்கும் ஒவ்வொரு வேலை உண்டு:

எறும்புகளின் தனி குடியமைப்பு தங்களுடைய வேலைக்காரர்களை வகுப்புகளாக அமைத்துக் கொள்கிறது. எறும்புகள் வெற்றியடைந்து வளமிக்கதாக இருப்பதற்கு இதுவே காரணமாக உள்ளது. ஒரு தனி குடியமைப்பில் ஒரு இராணி எறும்பு அல்லது பல இராணி எறும்புகளும் அதிக எண்ணிக்கையில் வேலைக்கார எறும்புகளும் பருவ காலத்து இறக்கையுள்ள எறும்புகளும் குடியிருக்கும். இராணி எறும்பு சந்ததியைப் பெருக்கும். இறக்கையுள்ள எறும்புகள், புதிய குடியிருப்புகளை ஸ்தாபிக்க துணிகரமாக வெளியே செல்லும். குடியிருப்பில் பெரும்பாலான வேலைக்கார எறும்புகள், கூடுகளில் தங்கி இராணி எறும்பையும், அதின் குட்டிகளையும் கவனித்துக்கொண்டிருக்கும். சில எறும்புகள் குழி பறித்துக் கூடுகளைப் பராமரிக்கும். சில வேலைக்கார எறும்புகள் குடியிருப்புகளுக்கு உணவைத் தேடி கொண்டுவருவதற்குத் துணிகரமாகச் செல்லும். இதுபோல செய்வதற்கு அநேக வேலைகள் உண்டு. அந்த குடியமைப்பில் ஆரோக்கியம் - ஒரு பொதுவான நோக்கத்திற்காக ஒருமித்து செயல்படும், எறும்புகளின் ஒத்துழைப்பின் மீது சார்ந்ததாகும்.

இதேபோல் நாமும் எதிர்காலத்தில் கிறிஸ்துவின் சரீரத்தின் பல வழிகளில் தேவனைச் சேவிக்கலாம் 1 கொரிந்தியர் 12:12-27. அப்போஸ்தலனாகிய பவுல் மனித சரீரம் என்ற ஒரு வித்தியாசமான ஒப்புமையைப் பயன்படுத்தி இக்கருத்தைக் கூறுகிறார். கிறிஸ்துவின் சரீரத்தில் பலவிதமான திறமைகள் கொண்ட பல உறுப்பினர்கள் இருப்பதை பவுல் குறிப்பிடுகிறார். இவர்களுக்குத் தகுதியான இடங்களில் தேவன் இவர்களைப் பொறுத்துகிறார். எல்லா உறுப்பினரும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகவும், தங்களுக்கு ஏற்ற வேலைகளைச் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். சபையின் ஒழுங்குகளைக் காணும் போது வேலைக்கார எறும்புகள் தங்களுடைய குடியமைப்புகளில் ஆரோக்கியத்திற்குப் பங்களிப்பதற்காகப் பயன்படுத்தும் அதே வழிகளை நாமும் பணி செய்யப் பயன்படுத்தலாம். எறும்புகள் சிறியவைகளைப் பராமரிப்பது போல நம்முடைய சபைகளில் இருக்கும் பிள்ளைகளை வாலிபர்

வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளின் வழியாக தேவனுடைய கோட்பாடுகளில் அவர்களை நாம் பயிற்றுவிக்கலாம் (நீதிமொழிகள் 22:6). கூடுகளைக்கட்டி அதைக் காப்பாற்றும் எறும்பைப்போல சத்தியத்தின் மேலுள்ள அன்பு மற்றும் விசுவாசத்தின் அடிப்படையில் உறவுகளின் வழியாகச் சபைகளை ஸ்தாபித்து அவைகளைப் பராமரிக்கலாம் (எபேசியர் 4:15-16). இறுதியாக எறும்பு தனக்காகவும், தன்னுடைய குடியிருப்பில் வாழக்கூடியவர்களுக்காகவும் உணவு சேகரிப்பது போல, நமக்கும், நம்முடைய சகோதரர்களுக்கும் ஆவிக்குரிய பிரயோஜனம் உண்டாகும்படி வசனங்களைத்தேடி சபைகளில் விளக்கவுரைகளையும், சாட்சிகளையும், உற்சாகத்தையும் பகிர்ந்து கொள்கிறோம் (1 கொரிந்தியர் 14:26).

**ஒருவரிடம் ஒருவர் கற்றுக்கொள்கிறோம்:**

எறும்புகள் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்கிறது. அதில் ஒரு எடுத்துக்காட்டு - எறும்பு செல்கிற பாதையாகும். உணவைத் தேடிச் சேகரிப்பதற்காக எறும்புகள் அனுப்பப்படும். ஒரு உணவை அவைகள் கண்டுபிடித்தப்பின், மீண்டும் அதனுடைய குடியமைப்புக்குச் செல்வதற்கு, வாசனை மற்றும் திசையில் உணர்வைப் பயன்படுத்தி சிறந்த ஒரு வழியைக் கண்டுபிடிக்கிறது. அவைகள் திரும்பும்போது, மற்ற எறும்புகள் அவைகளைப் பின் தொடரும்படிக்கு ஒரு இரசாயனத்தைப் போட்டுக்கொண்டே வரும். அப்பொழுது உணவைச் சேகரிப்பதற்கு அதிகமதிகமான எறும்புகள் அந்த வழியைப் பின் தொடரும். அவைகள் திரும்பி வரும் போது, எளிதில் பின் தொடர்வதற்கு அந்த இரசாயனம் மேலும் பாதையை உறுதிப்படுத்துகிறது. எறும்புகள் ஒருவரிடமிருந்து ஒருவர் எவ்வாறு கற்றுக்கொள்கிறார்கள் என்ற மற்றொரு எடுத்துக்காட்டு - ஒன்றோடு ஒன்றாக இணைந்து இயங்குதல். இன்று ஆகாரத்தைத் தேடி கண்டுபிடிக்கும் அறிவைப் பெற்றிருக்கும் எறும்பு, அந்த அறிவைப் பெறாத சக எறும்புகளை வழி நடத்தும். குறிப்பிட்ட ஒரு வகையான எறும்புகளுக்கு வழி காட்டுவது மட்டுமல்ல, மற்ற எறும்புகளின் முன்னேற்றத்தைக்குறித்து, உணர்வு பெற்றிருப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பின்வரும் எறும்பு மெதுவாக வந்தால் வழிகாட்டும் அந்த எறும்பும் மெதுவாக நடக்கும். பின்வரும் எறும்பு மிக நெருக்கமாகப் பின்வந்தால், வழிகாட்டும் எறும்பும் துரிதமாகச் செல்லும்.

இதுபோல சபையின் ஒழுங்குகளிலும் நாம் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்கிறோம். நாம் சபை கூடிவரும்போது, வசனங்களைப் படிப்பதின் வழியாக தேவனுடைய திட்டத்தைக்குறித்து இன்னும் அதிகமாகக் கற்றுக்கொள்வது நம்முடைய முயற்சிகளில் ஒன்றாகும். இந்த நோக்கத்திற்காகவே நாம் அடிக்கடி தலைப்புகளிலும், வசனவாரியான ஆராய்ச்சிகளை நடத்துகிறோம். ஒவ்வொரு அங்கத்தினர்களும் தங்களுடைய சொந்த ஆராய்ச்சியிலிருந்து கருத்துக்களை சபையில் பகிர்ந்துகொள்ளும்போது இப்படிப்பட்ட கூற்று சம்பாஷணைகள் நம்மை ஆவிக்குரிய வகையில் போஷிக்கும். இந்த ஆவிக்குரிய அறிவையும், சத்தியத்தின் பாரம்பரியத்தையும் தலைமுறை தலைமுறையாக எடுத்துச் செல்வதே ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்வதற்கான மற்றொரு வழியாகும். அதிகமான அனுபவத்தைப் பெற்ற எறும்பு, குறைவான அனுபவம் பெற்ற எறும்பை வழி நடத்துவதுபோல, சபையிலும் அதே ஒழுங்கு காணப்படுகிறது.

பல வருடங்களாக தொடர்ந்து சத்தியத்தில் இருப்பவர்கள், தங்களை வழி நடத்தினவர் களைக்குறித்து, நினைவுகொண்டிருக்கலாம். அப்போஸ்தலனாகிய பவுல் மற்றும் தீமோத்தேயுவை வெற்றி சிறந்த ஒரு வழிகாட்டியின் மாதிரியாக நாம் பெற்றுள்ளோம். இந்த எடுத்துக் காட்டில் அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுடன் தொடர்புகொண்டிருந்தார். அவர் தீமோத்தேயுவின் குடும்பத்தை நன்கு அறிந்திருந்ததினால் தீமோத்தேயுவை, "விசுவாசத்தின் பிள்ளை" என்று பவுல் குறிப்பிடுகிறார் (1 தீமோத்தேயு 4:12; 2 தீமோத்தேயு 1:5). அடுத்ததாக, பவுல் தீமோத்தேயுவை உற்சாகப்படுத்தினார். மற்றவர்களுக்கு கிறிஸ்துவைப்போன்ற மாதிரியாக இருக்க அவரது இளமை தடையாக இருக்கக்கூடாது என்று பவுல் தீமோத்தேயுவுக்கு ஆலோசனைக் கூறுகிறார் (1 தீமோத்தேயு 4:12). மூன்றாவதாக பவுல் தீமோதேயுவுக்குப் பொறுப்புகளைக்கொடுத்தார். எபேசு சபையிலுள்ள சகோதரர்களுக்கு உதவி செய்வதற்கு பவுல்

தீமோத்தேயுவை அங்கு விட்டுவந்தார் (1 தீமோத்தேயு 1:3, 4:13).

**ஒருங்கிணைப்பு மற்றும் தன்னலமற்ற:**

ஒரே குடியமைப்பில் எறும்புகள் ஒருமித்து சுயநலமில்லாமல் வேலைச் செய்கிறது. இதன் காரணமாகவே எறும்பின் குடியமைப்பு ஒரு, "மேலான உயிரினமாகக்" கண்ணோக்கப்படுகிறது. முழு அங்கத்தினரும், ஒருங்கிணைக்கப்பட்ட சமுதாயமாகச் செயல்படுவதையே மேலான உயிரினம் என்று அழைக்கப்படுகிறது. ஒரு தனிப்பட்ட எறும்பு, மிகுந்த பாரமாக இருக்கும் சவாலான வேலைச் சுமைகளை, மொத்த எறும்பு குடியமைப்பும், மிக எளிதாக நிறைவேற்றிவிடும். இதற்கு நெசவு வேலை செய்யும் எறும்புகள் பொருத்தமான எடுத்துக்காட்டாகும். இப்படிப்பட்ட எறும்புகள் மரங்களிலுள்ள இலைகளில் தங்கள் கூடுகளைக் கட்டும். பல நெசவு வேலை செய்யும் எறும்புகள், பல இலைகளை இழுத்து, ஒரு கூட்டைக் கட்டுவதற்குத் தேவையான இடத்தை ஏற்படுத்திக்கொள்ளும். சில நேரங்களில் இந்த வேலையை முழுமையாக நிறைவேற்றுவதற்குப், பல தனிப்பட்ட எறும்புகளைப் பயன்படுத்தி பாலங்களையும் கட்டும். மற்ற வேலைக்கார எறும்புகள், பல இலைகளை இழுத்து ஒருமித்து ஒட்ட வைப்பதற்கு, பட்டு நூல்களை உற்பத்திச் செய்யும். இதன் விளைவாக, எறும்புகளின் குடியமைப்புக்கு இலைகளினால் செய்யப்பட்ட ஒரு கூடு தரைக்குமேல் கட்டப்படுகிறது.


எறும்புகளைப்போல நாமும் சபையில் தன்னலமற்ற நிலையைப் பழக்கப்படுத்திக்கொண்டு ஒருமனப்பாட்டோடு வேலைச் செய்ய வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் இதே கோணத்தில் நம்மை உற்சாகப்படுத்துகிறார் "ஆதலால், கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" (எபேசியர் 4:1-3). "ஐக்கியம்" என்ற கிரேக்க வார்த்தைக்கு ஒருமனப்பாடு என்று பொருள் கூறப்படுகிறது.

நாம் பின்பற்றுவதற்கு அடிப்படையான கோட்பாடுகளையும், முக்கியமான ஒழுங்கு ரீதியிலான நிலைகளைப் பெற்றிருப்பதினால் நிபந்தனையற்ற ஒருமனப்பாட்டிற்கு நாம் முயலுவதில்லை. இவைகள் நிறைவு செய்யப்பட்டாலும், சபையில் நாம் ஒருமனப்பட்ட ஆவியைப்பெறுவது நம்முடைய இலக்குகளில் ஒன்றாக இருக்கிறது. மனத்தாழ்மை, சாந்தம், நீடியபொறுமை மற்றும் அன்பின் ஆவியில், ஒருமனப்பாட்டைப் பெறுவதற்குத் தேவையான தன்னலமற்ற குணங்களை அப்போஸ்தலனாகிய பவுல் வரிசைப்படுத்துகிறார். யோவான் 17-ஆம் அதிகாரத்தில் நம்முடைய ஒற்றுமைக்காக இயேசு மூன்று முறை ஜெபித்தார். ஆண்டவராம் இயேசு பரலோக பிதாவோடு பெற்றிருந்த அதே ஆவியின் ஒருமைப்பாட்டை தம்முடைய சீஷர்களும் பெறவேண்டுமென்று 21, 22-ஆம் வசனங்களில் இயேசு ஜெபித்தார். இது இயேசு நமக்கு முன்வைத்த மிக உயர்வான குறிக்கோளாகும். நம்முடைய விழுந்து போன சுபாவத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் நாம் இப்படிப்பட்ட நிலையை அடைவது, எதிர்பார்க்க முடியாத ஒன்றாகும். ஆனால் இதுவே நம்முடைய ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கும் இலக்காகும்.

எறும்பு அதனுடைய குடியமைப்போடு கொண்டிருக்கும் தொடர்பானது, சபையில் ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் ஒரு கட்டாயமான எடுத்துக்காட்டு உள்ளது. தேவனுடைய மறைப் புதிரான ஞானம், அவருடைய சிறிய உயிரினங்களிலும் காணப்படுகிறது.

**ஒரு விசுவாசி - ஒரு மோசடிக்காரன்**

# இரண்டு சிங்கங்கள்



Dan Beard

"மிருகங்களில் சவுரியமானதும் ஒன்றுக்கும் பின்னிடையாததுமாகிய சிங்கமும்" (நீதிமொழிகள் 30:30).

சிங்கங்களைப்பற்றி வேதாகமத்தில் அநேக குறிப்புகளை நாம் பெற்றுள்ளோம். சகோதரர்களுக்குப் பரிட்சயம் இரண்டு முக்கியமான சிங்கங்களைப் பற்றி நாம் காணலாம். நம்முடைய ஆண்டவரை அடையாளப்படுத்தும் யூதா கோத்திரத்து பாலசிங்கம் மற்றும் பேதுரு நம்மை எச்சரிக்கக்கூடிய கெர்ச்சிக்கிற சிங்கமாகிய நம்முடைய மிகப்பெரிய எதிராளியான சாத்தான்.

**கெர்ச்சிக்கிற சிங்கம்:**

"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான், விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே" (1 பேதுரு 5:8, 9).

தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள். அதாவது முன் விழிப்புள்ளவர்களாக, எச்சரிப்புள்ளவர்களாக நம்முடைய எதிராளியைத் தொடர்ந்து கவனிப்பவர்களாக இருக்க வேண்டும். நாம் எதைக் கவனித்திருக்க வேண்டும் என்பதை அறியாதிருந்தால், நாம் கவனிக்கும் காரியம் பயனற்றதாக இருக்கும். நம்முடைய எதிராளியைக்குறித்து நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம் என்று பவுல் கூறுகிறார். "சாத்தானாலே நாம் மோசம் போகாதபடிக்கு, அப்படிச் செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே" (2 கொரிந்தியர் 2:11).

சிங்கம் கெர்ஜிக்கும்போது, அது குறி வைக்கும் இரை, மனிதர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் உறைந்து விடுவார்கள். இந்தக் கொடூரமான மிருகம், குறைந்த பட்சம் ஒரு மணி நேரத்திற்கு 50 மைல் ஓடி, 36 அடிகள் பாய்ந்துச் செல்லும். சிங்கங்களின் பெலன் வியக்கத்தக்கது. தன்னைக் காட்டிலும் மிகப்பெரிய மிருகங்களாகிய வரிக்குதிரைகள், நீர் எருமைகள் போன்ற மிருகங்களையும் எளிதில் கொன்றுவிடும். சரியான பாதுகாப்பின்றி ஒரு மனுஷன் சிங்கத்திற்கு ஈடு கொடுக்க முடியாது. சாத்தானைப் பொறுத்தவரையில் இது எவ்வளவு உண்மையாக உள்ளது. ஆண்டவர் நம் பட்சத்தில் இருக்கிறார் என்ற உறுதியை நாம் பெற்றிருந்தாலும் அவனுடைய உபாய தந்திரங்களுக்கு நாம் ஒருபோதும் ஈடுகொடுக்க முடியவில்லை.

நம்முடைய எதிராளியை நாம் அறிந்துகொள்வதற்குச் சரியான பாதுகாப்பு தேவைப்படுகிறது. இதைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர் 6-ஆம் அதிகாரத்தில் வரிசைப்படுத்துகிறார். இரட்சிப்பின் தலைச்சீராவை அணிந்து, நீதியின் மார்க்கவசத்தையும், விசுவாசம் என்னும் கேடகத்தையும் அணிய வேண்டும். நாம் சமாதானம் என்னும் ஆயத்தம் என்ற பாதரட்சையைத் தொடுத்து, கையில் ஆவியின் பட்டயத்தைப் பிடித்திருக்க வேண்டும். இந்தச் சர்வாயுதவர்கங்களுக்கான தேவையைக்குறித்து எபேசியர் 6:10-13 வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் மட்டுமல்ல சகலவிதமான துரைத்தனங்களோடும், வல்லமைகளோடும் இந்த உலகத்தின் இருளான அதிகாரத்தோடும், ஆவிக்குரிய துன்மார்க்கத்தோடும் நாம் போராட வேண்டியிருப்பதால் நமக்கு இந்த ஆவிக்குரிய சர்வாயுதங்கள் மிக அவசியம்.

முதல் பேதுருவில், எதிராளி என்ற வார்த்தை ஆன்டிடீகோஸ் (an-tid'-ee-kos) என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும். (An-tid'-ee-kos) இதற்கு எதிர்த்து நிற்பவன், விசேஷமாக சாத்தானோடு பிரதானமான எதிரியாகச் சொல்லப்படுகிறது, "...குற்றஞ்சுமத்துபவன்..." என்று வெய் மௌத் (Weymouth) மொழிபெயர்ப்பில் எழுதப்பட்டுள்ளது. பழி சுமத்துவதில் சாத்தான் உண்மையில் மிகச் சிறந்தவன். ஏதேன் தோட்டத்தில்

ஏவாளிடம் சில முக்கியமான செய்திகளை அறிவிக்காமல், தேவன் நிறுத்தி வைத்திருப்பதாக அவன் தேவன் மேல் குற்றஞ்சாட்டினான் (ஆதியாகமம் 3:4, 5).

ஆண்டவருடைய விசுவாசிகளை சோர்வடையச் செய்வதே சாத்தானுடைய கருவிகளில் ஒன்றாகும். சில விஷயங்களில் சிலர் மனசாட்சிக்கு அதிகம் கட்டுப்பட்டவர்களாக, சாத்தானின் ஆலோசனையின்படி தாங்கள் அபாத்திரர் என்றும் புறக்கணிக்கப்பட்டவர்கள் என்றும் அல்லது இரண்டாம் மரணத்திற்குரியவர்கள் என்றும் தங்களைத் தீர்மானித்துக்கொள்கிறார்கள். ஆனால், "உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்" (1 பேதுரு 4:12) இதை நம்முடைய விசுவாசத்திற்குரிய பரீட்சையாக தேவன் அனுமதிக்கிறார். "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" (எபிரெயர் 11:6). ஆகவே அவருடைய சாயலாக நாம் வளர்ச்சியடைவதற்கு நம்முடைய விசுவாசம் சோதிக்கப்பட வேண்டும். சோதனையினால் விசுவாசம் தேர்ச்சிப்பெறும்போது, பிதாவின் பார்வையில் அதிகப் பிரியமானவர்களாகக் காணப்படுவோம். இப்படியாக நம்முடைய விசுவாசம், பசும் பொன்னைக் காட்டிலும் விலையேறப்பெற்றதாக நிரூபிக்கப்படுகிறது (1 பேதுரு 1:7-9). ஆயினும் கெர்ஜிக்கிற சிங்கமாகிய சாத்தான், தெய்வீக அங்கீகரிப்பின் இலக்கையடைய, கடும் முயற்சிகளில் ஏற்படும் நம்முடைய பெலவீனங்களையும், தோல்விகளையும் மிகைப்படுத்தி நம்முடைய விசுவாசத்தை அழித்துவிடலாம், நம்மை மனமடிவுக்குள்ளாக்கியும் விடுவான்.

"ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" (யாக்கோபு 4:7). நாம் மிகுதியான விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை, கிருபாசனத்தண்டையில் சென்று பெற்றுக்கொள்வதற்கு வாக்களிக்கப் பட்டிருக்கிறோம். அப்பொழுது விசுவாசத்தினால் சாத்தானை நாம் எதிர்த்து நிற்கலாம். உறுதியான தீர்மானங்களினிமித்தம் சாத்தான் நம்மைவிட்டு விரைந்தோடுவான்.

இந்தக் கேடான சிங்கம் எதிர்பாராத வகையில் திருட்டுத்தனமாகப் பதுங்கி எதிர்ப்பது, அதனுடைய தாக்குதலின் ஒரு வகையாகும். நாம் கவனிக்காத நேரத்திற்காக அல்லது நாம் பலவீனமாக இருக்கும் நேரத்திற்காக எதிர்பார்த்திருக்கும். அதற்கு ஒரு தந்திரமான நடை உண்டு. அது பதுங்கி வருவதை அதன் இரை கண்டுபிடிப்பதற்கு முன் மிக அருகில் வருவதற்கு பஞ்சுபோல் பாதங்களைப் பெற்றுள்ளது.

**பின்புறத்திலிருந்து மிருகம் தாக்கும்:**

"சிங்கங்கள், புலிகள், சிறுத்தைகள் போன்ற விலங்கினங்களைத் தொடர்ந்து பயமுறுத்திக் கொண்டிருப்பதே அவைகளைப் பாதுகாப்போடு கையாளும் இரகசியம் என்று மிருகங்களின் பயிற்சியாளர்கள் கூறுகிறார்கள். அந்தப் பயம் தெளிந்தவுடன், அவர்களுடைய பாதையில் குறுக்கிடும் யாவையும் உடனே தாக்கும். இவைகள் நம்பிக்கைத் துரோகிகளாகவும் இருக்கின்றன. தங்களுடைய எஜமானனின் கண்கள் அவைகளை விட்டு விலகும்போது, உடனே தாக்குவதற்குத் தேவையான தைரியத்தை எப்போதும் சேகரித்து வைத்திருக்கும். அதனுடைய பயம் அகன்று உரிமையாளரை அது எப்போது தாக்குமென்று யாருக்கும் தெரியாது. சாத்தானோடு நம்முடைய போராட்டங்களும் இப்படியாகவே இருக்கிறது. அவன் எப்போதுமே நம்மைத் தாக்குவதற்கு பின்புறமாகவோ அல்லது பதுங்கிக்கொண்டோ இருப்பான். இந்தச் சாத்தான் கெர்ஜித்துக்கொண்டு எவனை விழுங்கலாமோவென்று பேராவலுடன் சுற்றித் திரிகிறான். ஆனால் அவனை தைரியத்தோடு எதிர்ப்பவர்களுக்கு அவன் ஒரு கோழையாவான். "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்." இந்த வசனம் அப்போஸ்தலனாகிய யாக்கோபு, முதல் அறிக்கை செய்யும்போது, எவ்வளவு உண்மையாக இருந்ததோ, நம்முடைய காலத்திலும் அவ்வளவு உண்மையாகவே உள்ளது."

நம்முடைய உடன்படிக்கையின் பொருத்தனைகளிலிருந்து சாத்தான் நம்மைப் பின்வாங்கச் செய்வான். நாம் சோர்வடையும்போது வழக்கமாக நாம் அதிகமாகத் தாக்கப்படுகிறோம்.

"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது" (எபிரெயர் 10:38). பலியின் இடுக்கமான வழியிலிருந்து மிகச் சிறிய அளவிலான திரும்புதலே பின்வாங்கிப் போவதற்கான ஒரு அறிகுறியாகும் - ஒருவேளை பின்னாக இருக்கும் காரியங்களை ஒரு ஏக்கமான அல்லது அவைகளைத் திரும்பிப் பார்க்கக்கூடியதாக மட்டும் இருக்கலாம்; நமக்குமுன்

வைக்கப்பட்டிருக்கும் பந்தய சாலையில் ஓடுகிற நம்முடைய ஓட்டம் சற்றுக் குறையக்கூடியதாக இருக்கலாம். விழுந்துபோன சுபாவத்தில், மிகுந்த விருப்பத்தோடு இணங்க கொஞ்சங்கொஞ்சமாக சத்தியத்தை விட்டுக்கொடுக்கக்கூடிய எண்ணங்கள் வரும். இப்படியான நம்முடைய **பலவீனமானக் காரியங்கள்** உடனடியாகக் குறிப்பெடுத்துக்கொண்டு, அதைச் சாதகமாகப் பயன்படுத்தி, சிறந்த வகையில் நமக்குப் பொருத்தி, சோதனைக்காரன் தன்னுடைய கலைத்திறனுக்கு வழியை ஆயத்தப்படுத்துவான். **நுட்பமான தவறுகளும்** நியாயத்தீர்ப்புக்கு எதிராக நிற்கிறது; நீதியின் போலி தோற்றத்தோடு பிரியமான கவர்ச்சிகள் பெரும்பாலும் உணர முடியாதளவுக்கு ஆண்டவருக்கென்று கொடுக்க வேண்டிய "முதல் அன்பு" மற்றும் அவருடைய ஊழியத்திற்காகக்கொண்டிருக்கும் முதல் வைராக்கியத்தையும் மறந்து, சத்தியத்தையும் அதன் ஆவியையும்விட்டு விலக்கிவிடும். இனி ஒருபோதும் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட மாட்டார்கள் (R1799, ஏப்ரல் 8 மன்னா).

சாத்தான் அடிக்கடி ஒளியின் தூதனின் வேஷத்தைத் தரித்துக்கொள்வான் என்று பவுல் எச்சரிக்கிறார். சாத்தானும் விழுந்துபோன தூதர்களும் பொய்யரும் வஞ்சகர்களுமாக இருப்பதினால் இது நமக்கு ஆச்சரியமல்ல. லூசிபர் என்ற பெயருக்கு, "அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி" என்று பொருள் (ஏசாயா 14:12). இதன் பொருள் விளக்கம் ஆர்வமூட்டுகிறதாக உள்ளது. லூசிபர் என்ற பழமையான ஆங்கில வார்த்தை லத்தீன் வார்த்தையாகும். இதற்கு, "ஒளி - எடுத்துச் செல்லுதல்" என்று பொருள். லக்ஸ் (lux) என்றால் ஒளி மற்றும் பெர்ரி (ferre) என்றால் எடுத்துச்செல் என்று பொருள்.

ஆகவே துவக்கத்தில் சாத்தான் ஒளியை எடுத்து வந்தவனாக இருந்தான். ஆனால் ஒளியின் தூதனாக தன்னையே காண்பித்துக்கொண்டு, அனைவரையும் தண்டித்துக்கொண்டு அவன் இருளுக்கும், இருளான கிரியைகளுக்கும் அடையாளமாக மாறினான். ஆகவே அவன் மற்றவர்களை அவனுடைய வஞ்சகத்தில் நுணுக்கமான தவறுகளின் வழியாக சத்தியத்தின் வெளிச்சத்திலிருந்து விலக்கி, தவறுகளும் அவிசுவாசமுமான இருளுக்குள் அவன் அவர்களை வழி நடத்துகிறான். பெருமை அல்லது வீண் மகிமையை தங்களுடைய இருதயத்திற்குள் அனுமதித்து வஞ்சிக்கப்பட்ட மூப்பர்களை சாத்தான் தேடி தவறுகளை அறிமுகப்படுத்துவான். இவ்வாறாக மயக்கத்தில் இருக்கும் அநேக தலைவர்கள் குறைவான ஆயத்தத்தோடும் முழுமையாக சர்வாயுத வர்க்கத்தை அணிந்திராததையும், தங்களின் தலையைப் பாதுகாக்க வேண்டிய தலைச்சீராவை சரியாக அணியாததை அறிந்து, அவன் அதிகம் மதிப்புப் பெற்றவர்களைப் பயன்படுத்தி, முடிந்தவரையில் நெறி தவறச்செய்வான். ஆவியின் பட்டயத்தைத் திறமையாகப் பயன்படுத்தாமல், அவர்களுடைய காவல் விழிப்புணர்வு குறைந்து, எளிதில் வஞ்சிக்கப்படுகிறார்கள் (2 கொரிந்தியர் 11:14, 15; அப்போஸ்தலர் 20:3; யாக்கோபு 3:1 - பார்க்கவும்).

ஆகவே விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டுமென்ற பேதுருவின் எச்சரிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. ஆண்டவரின் வார்த்தைகளைப் படித்து, அனைத்துக் காரியங்களையும் நிரூபித்து, நமக்குக் கொடுக்கும்படிக்கு சத்தியத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டால், விழிப்புள்ளவர்களாக இருக்கலாம். "விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்று நம்முடைய ஆண்டவர் பேதுருவுக்குக் கட்டளையிட்டபடி, நாமும் இவைகளைக் கைக்கொண்டால், தந்திரமான எதிரியிடமிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம் (மத்தேயு 26:41; 2 தீமோத்தேயு 2:15; 1 தெசலோனிக்கேயர் 5:21).

**யூதா கோத்திரத்து பாலசிங்கம்:**

சிங்கங்கள் பலத்திற்கும் தைரியத்திற்கும் அடையாளமானது. அவைகளின் இந்தக் குணங்களுக்காக வரலாறு முழுவதும் கொண்டாடப்பட்டுவருகிறது. நாகரீகத்திற்கும் தோற்றத்திற்கும் பொதுவான அடையாளமானவை. இதனால் சிங்கம், "காட்டுக்கு இராஜா" என்று அழைக்கப்படுகிறது.

"யூதா கோத்திரத்து பாலசிங்கம்" என்ற சிறப்பு பெயர் நம்முடைய ஆண்டவரின் வல்லமையையும் ஆற்றலின் நிறைவையும் தெளிவாகக் குறிப்பிடுகிறது. இப்படியாக ஆயிரவருட அரசராக அவருடைய வல்லமையுள்ள பலத்தைச் சித்தரிக்கிறது. யாக்கோபு தம்முடைய குமாரனாகிய யூதாவுக்குக் கொடுத்த ஆசீர்வாதத்தில் அந்தக் கோத்திரத்தோடு சிங்கம் சம்பந்தப்பட்டிருப்பதைக் காணலாம் ஆதியாகமம் 49:8-12 வசனங்களில், நம்முடைய ஆண்டவரோடு தொடர்புடைய பல அடையாளங்களைக் காணலாம். எடுத்துக்காட்டாக

யூதா தன்னுடைய பகைஞரின் கழுத்தின்மேல் தன்னுடைய கைகளை வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியாகவே இயேசுவுக்கு நிழலான இராஜாவாகிய தாவீது தேவனுடைய பலத்தைப் பெற்று வல்லமையுள்ள இராஜாவாக எல்லா எதிரிகளையும் முறியடித்தார். அதுபோல யூதா ஒரு சிங்கக்குட்டி என்று யாக்கோபு கூறினார். அந்தச் சிங்கம் வளர்ச்சியடைந்தபோது அதை எதிர்க்க யாருக்கு துணிகரமுண்டு?

யூதாவோடு தொடர்புடையதாகப் பயன்படுத்தப்பட்ட மற்றொரு அடையாளம் - செங்கோலாகும். இது ஆளுகிற அதிகாரத்தை அடையாளப்படுத்துகிறது. சமாதானத்தின் பிரபுவாகிய ஷைலோ (Shiloh), உயிர்த்தெழுந்து வரும்வரை அந்த செங்கோல் யூதாவுக்குக் கொடுக்கப்பட்டது.

"யூதா கோத்திரத்து பாலசிங்கம்" என்ற சிறப்பு பெயர், யூதா கோத்திரத்தில் பிறக்கக்கூடியவர் களுக்கு மட்டுமே கொடுக்கப்படும். ஆகவே இயேசு மனுஷராகப் பிறப்பதற்கு முன் லோகாசாக இருந்தபோது இந்தப் பெயர் அவருக்குச் சூட்டப்படவில்லை. மரியாளிடம் பிறந்தபோது அவர் யூதா கோத்திரமும், தாவீதின் வேருமாய் இருந்தார். தேவனுடைய சித்தம் நிறைவேற்றி மனுஷரின் இரட்சிப்பின் வேலைகளைச் செய்வதற்குத் தன்னைத்தான் யோர்தானில் அர்ப்பணித்தப்போது இந்தச் சிறப்புப் பெயரை அவர் பெற்றார்.

குறிப்பாக நம்முடைய ஆண்டவருக்கு இந்தச் சிறப்புப் பெயர் நேரடியாகப் பயன்படுத்தப்பட்ட ஒரே வசனம், "அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார்" வெளிப்படுத்தல் 5:5.

தலைச்சன் பிள்ளைகளாகிய சபையை அடையாளப்படுத்தும் யோவான், இந்தப் புஸ்தகத்தைத் திறக்கக்கூடிய யாரையும் காணாததினால் அவர் அழுதுகொண்டிருப்பதாகக் காண்பிக்கப்படுகிறது. இது எந்த புத்தகம்? அதுவரையிலும் புதிய ஏற்பாடு எழுதப்படாததினால் நிச்சயமாக அது வேதாகமம் இல்லை. இது தேவனுடைய யுகங்களைப் பற்றிய திட்டத்தின் புத்தகம் (எபேசியர் 3:11 காண்க). இது உலகத் தோற்றத்திற்கு முன் யேகோவா தேவனுடைய கரங்களிலிருந்த புஸ்தகமாகும். இயேசு அவருடைய பலியின் வேலைகளைச் சிலுவையில் முடிந்தவுடன் அந்தப் புஸ்தகத்தைத் திறப்பதற்குப் பாத்திரமானார். அவர் உயிர்த்தெழுந்தப் பின் பூமியிலும், பரலோகத்திலும் அனைத்து வல்லமையையும் தேவனால் அவருக்குக் கொடுக்கப்பட்டது (மத்தேயு 28:18). ஆகவே அவருக்கு அந்தப் புத்தகத்தையும், அந்தப் புத்தகத்தைத் திறப்பதற்கான வல்லமையையும் கொடுக்கப்பட்டது. தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்தும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. அவர் பெற்ற இந்த ஞானம் மற்றும் வல்லமை, யோவான் கண்ட காட்சியில் அடிக்கப்பட்ட ஆட்டின் ஏழு கொம்புகளிலும், ஏழு கண்களிலும் அடையாளப்படுத்தப்படுகிறது. நமக்காக 6-ஆம் வசனத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏழு கண்கள் முழுமையான ஞானத்தையும், ஏழு கொம்புகள் முழுமையான வல்லமையையும் அடையாளப்படுத்துகிறது.

இப்பொழுது முழு வல்லமையையும் பெற்ற யூதா கோத்திரத்து சிங்கத்திடம் அந்தப் புத்தகம் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு முத்திரையும், ஒவ்வொரு காலத்திலும் திறக்கப்பட்டு பரலோக பிதாவின் ஒழுங்குகளையும், இராஜ்யத்தின் நம்பிக்கைகள் மற்றும் பூமியின் குடும்பங்களில் ஆசீர்வாதத்தையும் படிப்படியாக வெளிப்படுத்துகிறது. இப்படியாக இது சுவிசேஷ யுகம் முழுவதிலும் ஏழாம் முத்திரை திறக்கப்படும் காலத்தில், ஏழாம் தூதன் காட்சிக்கு வந்து, ஏழாம் எக்காளம், சபையின் ஏழாம் காலத்தில் ஊதப்படும்போது படிப்படியாக வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பொழுது தேவனுடைய திட்டமே விழிப்புள்ளவர்களுக்குத் திறக்கப்பட்டுள்ளது.

இந்த இராஜசிங்கத்தின் ஆளுகையின்போது, கெர்ச்சிக்கிற சிங்கமாகிய சாத்தான் கட்டப்பட்டு, அதற்குப் பின் வெளிப்படுத்தல் 20-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட கொஞ்சம் காலத்தில் நிச்சயமாக அழிக்கப்படுவான். யூதா கோத்திரத்து பாலசிங்கம் ஆட்சி செய்யும்போது, அந்தப் பெரும் பாதையில், "சிங்கமும்," "துஷ்ட மிருகமும்" இருப்பதில்லை என்று ஏசாயா 35:9-ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். உலகத்தில் இரட்சிக்கப்பட்ட மனுக்குலம் நடப்பதற்காக இந்த வழி ஆயத்தம் செய்யப்பட்டிருக்கும் (அப்போது சாத்தான் கட்டப்பட்டிருப்பான்). இவர்கள் புதிய உடன்படிக்கையின் நிபந்தனையின் கீழ் தேவனோடு முழு பரிபூரணத்தோடு இசைந்திருக்க அவரை நோக்கிச் செல்வார்கள்.

# மற்றும் மரபுவழி பண்பியலில் ஒரு திருத்தம்

அச்சடிக்கப்பட்ட பக்கத்திலுள்ள ஒரு வட்டளவில் இருக்கும் ஒரு சிறு பந்துபோல்தான் துவங்குகிறது. மனித வாழ்வு மனிதனின் எல்லா குணங்களையும் அடக்கிக்கொண்டு அந்தச் சிறிய பந்தில் ஆறடி நீளத்திற்குச் சுருண்டு இருக்கிறது DNA (உயரம், தோலின் நிறம் போன்றவைகளை). உண்மையாகவே மரபு வழியின் நட்சத்திரமாய் திகழ்கிறது DNA. டைம் பத்திரிக்கையின் அட்டை பகுதியிலும் இதனைப் பற்றிக் கூறியுள்ளார்கள்.

இந்த DNA பற்றிய ஆராய்ச்சி 19-ஆம் நூற்றாண்டில் துவங்கியது. 1869-ஆம் ஆண்டு Friendrich Miescher என்னும் விஞ்ஞானி மனிதனின் இரத்த வெள்ளை அணுக்களில் "நியுக்ளிக் அமிலம்" இருப்பதாகக் கண்டறிந்தார். இதற்கு பின்னர் deoxyribonucleic acid or DNA என்று பெயரிடப்பட்டது. மற்றவர்கள் அதனுள் அடங்கியிருக்கும் பகுதிகளைக்குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டனர். ஒவ்வொரு இனத்திலும் இந்த DNA மாறுபட்டுக் காணப்பட்டாலும், அதனுள் இருக்கும் பண்புகள் நிரந்தரமாகப் பராமரித்து வருகிறது என்ற தீர்மானத்திற்கு வந்தனர். 1953-ஆம் ஆண்டு ஜேம்ஸ் வாட்சன் மற்றும் பிரான்சிஸ் கிரிக் (Crick) என்ற இரு விஞ்ஞானிகள் DNA-க்குள் இருக்கும் குறிப்பான தனிமத்தைக் கண்டறிந்தனர். (a three- dimensional double helix - மூன்று உரு வளவைக்கொண்ட இரட்டைச் சுழல் வட்டம்) இதைக் கண்டுபிடித்தப்பின்தான் DNA தொழில் நுட்பத்தில் மிக வேகமாக வளர்ச்சி ஏற்பட்டது. ஐம்பது வருடங்களுக்குப் பிறகு ஆராய்ச்சியாளர்கள் மனித மரபணு திட்டத்தை நிறைவு செய்தார்கள். இத்திட்டத்தின் மூலம் 3 பில்லியன் எழுத்துக்களைக் கொண்ட மனித மரபுவழி பண்பியல் குறியீடு வரிசைமுறைபடுத்தப்பட்டது.

அதன் பின்பு DNA-வைக்கொண்டு பல பயன்பாடுகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதில் மிகவும் பயனுள்ள ஒன்றாக இருப்பது DNA தட்டச்சு. இதன் செயல்முறை எவ்வாறெனில், ஒரு தனி மனிதனிடமிருந்துப் பிரித்தெடுக்கப்பட்ட DNA-வை பகுத்து ஆய்வு செய்து, DNA "வரைபடத்தை" உருவாக்கலாம். இந்த வரைபடத்தை இரட்டையர்களைத் தவிர மற்ற எல்லா மனிதனுக்கும் தனித்துவம் வாய்ந்ததாய் இருக்கும். திசுக்களின் கூறுகள், இரத்தம், முடி, தசையின் துணிக்கைகள், எலும்பு, பற்கள் இன்னும் உடலின் பல உறுப்புகளின் தோற்றத்தை உறுதி செய்ய USA, ஆஸ்திரேலியா, ஜெர்மனி மற்றும் கனடா போன்ற நாடுகளின் இந்த வரைபடத்தை உபயோகிக்கிறார்கள்.

எடுத்துக்காட்டாக, ரிச்சர்டு 111 என்ற இங்கிலாந்தின் புகழ் பெற்ற இராஜாவின் சிதைந்த உடல் இங்கிலாந்திலுள்ள Leicester என்னுமிடத்தில் கண்டுபிடிக்கும் வரை அவரைப் புதைத்த இடம் யாருக்கும் தெரியாமல் இருந்தது. அந்த உடலில் எஞ்சியுள்ள பாகங்களில் போரில் உண்டான காயங்களும் மற்றும் முதுகெலும்பின் வளைவின் ஆதாரமும் கிடைத்தது. ஆனால் அந்த எலும்புகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட DNA-வை அவருடைய நேரடி மரபுவழி தோன்றலான அவருடைய சகோதரியுடன் பொருந்திய பின்பு அந்த எலும்புகூடு ரிச்சர்டு 111-க்குச் சொந்தமானது என்று உறுதி செய்ய முடிந்தது.

DNA தட்டச்சைக்கொண்டு மேலும் சில உபயோகமான காரியங்கள் - சர்ச்சைக்குரிய பாரம்பரியம், பெற்றோர் மரபண்பு வழக்குகள், குற்றவாளியின் விசாரணை, விபத்தில் இறந்தவர்களை அடையாளங்காட்டுதல், மனித புற்றுநோய் உயிரணுக்களை அடையாளங்கண்டு உறுதி செய்தல், உயிர்நிலைச் சார்ந்த மூலப்பொருள் மனித தோற்றம் உடையதா என்று உறுதி செய்தல் மற்றும் மனித ஜனத்தொகையின் மூதாதையர் மரபின் தோற்றத்தைக்குறித்து ஆராய்ந்து அறிதல் போன்றவை ஆகும்.

## மரபு வழி பண்புகளைத் திருத்தி அமைத்தல்:

ஆராய்ச்சிக் கூடங்களில், கரு முட்டைகள் உருவான தொடக்கத்திலேயே அதை மாற்றுவதற்கான அனுமதி அளிக்கப்பட வேண்டுமென்று டிசம்பர் 2015-இல் அமெரிக்காவிலுள்ள தேசிய விஞ்ஞானிகளின் சங்கம் (National Academy of Sciences) கேட்டுக்கொண்டது. இன்று விலங்குகளிலும், தாவரங்களிலும் மரபுவழி பண்புகளை மாற்றியமைத்து, நோய்களை உண்டாக்கும் கிருமிகளை அகற்றுவதில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. எடுத்துக்காட்டாக, கலிபோர்னியாவில் மலேரியா எதிர்க்கும் கொசுக்களை உருவாக்கியுள்ளனர். அவைகள் அவற்றிலுள்ள புதிய பாதுகாப்பு மரபணுவை பிற கொசுக்களுக்கும் பரப்பும்.

இவ்வருட துவக்கத்தில், பிரிட்டனின் பாராளுமன்றம் இன்னும் ஒரு படிமேலாகச் சென்று, மனித கரு முட்டைகளில் மரபணுவை மாற்றியமைத்து, துவக்க கால வளர்ச்சியின் அதிசயங்களைக் கட்டவிழ்க்க ஆராய்ச்சியாளர்களுக்கு அனுமதியளித்தது. கணினியில் எவ்வாறு வெட்டி ஒட்டும் திட்டம் செயல்படுகிறதோ அவ்வாறே மனிதனில் மரபணு திருத்துவதின் மூலம் விஞ்ஞானிகளால் கருமுட்டையிலேயே DNA-வை மாற்றியமைக்க முடிகிறது. மரபுரிமை நோய்களைக் குணப்படுத்தவும் அதை முற்றிலும் அகற்றிவிடவும் இன்று ஆராய்ச்சியாளர்கள் விடைதேடிக் கொண்டிருக்கின்றனர்.

விஞ்ஞானிகள் நீண்ட நாட்களுக்கு முன்பே குறைபாடுள்ள மரபணுக்களை அடையாளம் காட்டியிருந்தாலும், அதைப் பழுதுபார்ப்பது மிகக் கடினமான ஒன்றாக இருந்தது. CRISPR-Cas9 என்று மனித மரபணு திட்டத்தால் உருவாக்கப்பட்ட ஒரு புதிய நுட்பம் ஒன்று மூலக்கூறு கருவிகளைக்கொண்டு குறைபாடுள்ள மரபணுக்களைப் பழுதுபார்க்கிறது அல்லது மாற்றியமைக்கிறது. இந்தக் கருவியைக்கொண்டு மனிதனுக்கு ஏற்படும் கோளாறுகளான நோயால் நலிவுற்ற அணுக்கள், தவறான இரத்த உற்பத்திச்செய்யும் அணுக்கள் போன்றவைகளை விலங்குகளுக்குள் பொருத்தி, வெற்றிகரமாகக்

குணப்படுத்த முடிந்தது. சமீபமாக பிரிட்டனிலுள்ள மருத்துவர்கள், இரத்த புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒரு வயது குழந்தையின் சேதமடைந்த அணுக்களை மாற்றி, கிருமிகளைத் தடுக்கும் தடைகாப்புறுதி வாய்ந்த அணுக்களைப் பொருத்தினார்கள். இறுதியில், மரபணுக்களை மாற்றுவதன் மூலம் மரபுரிமை நோய்களை முற்றிலுமாகத் தடுக்க இயலும் என்று ஆராய்ச்சியாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## ஆதாமின் பரம்பரையை அடையாளங்காண முடியவில்லை:

மரணம் என்பது தவிர்க்கமுடியாதது, ஆனால் ஏன் இவ்வாறு உள்ளது என்று மனித ஆராய்ச்சியாளர்களுக்கு இன்னும் வெளிப்படையாகத் தெரியவில்லை. ஷூ லேசின் (shoe lace) நுனியிலுள்ள பிளாஸ்டிக் பொருள்போல, குரோமோசோமைப் பாதுகாக்க DNA-யின் நுனியில் Telomeres என்ற உறுப்பு உள்ளது. இது அணுக்களின் வயதை நிர்ணயம் செய்வதற்கு அத்தியாவசியமான ஒரு பாகமாகும். பல இலட்ச முறைகள் உறுதியாகத் துடித்துக்கொண்டிருக்கும் இருதயம், சிறிது சிறிதாகக் குறைகிறது. பல வருடமாய் கடுமையான செயல்களில் ஈடுபட்டிருந்த மூட்டுகள் செயல் இழந்துப் போகின்றன. மூளை சுருங்குகின்றது, முதுகெலும்பு வளைகிறது, கண்கள் பார்வை இழக்கின்றன, காதுகள் கேளாமல் போகின்றது, உறுப்புகளில் புற்று நோய் புகுகின்றது, எலும்புகள் நொறுங்க ஆரம்பிக்கின்றன மற்றும் ஞாபக சக்தி குறைகின்றது.

பாவத்தினால் விழுந்துபோன மனிதனைப்பற்றி கூறப்படும் ஆதியாகமத்தில் மட்டுந்தான் மரணத்தின் மர்மத்திற்குப் பதிலுள்ளது. சர்ப்பத்தின் வழியாய் இயங்கின சாத்தான், அந்த மரத்திலிருந்த கனியை உண்டால் மரணம் வராது மாறாக, ஞானமே பிறக்கும் என்று ஏவாளிடம் கூறியது. "நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும்" (ஆதியாகமம் 3:4, 5). தடை செய்யப்பட்ட கனியை உண்டால் - அது என்னவாக இருந்தாலும் அந்தக் கீழ்ப்படியாமைக்குரிய தண்டனை கண்டிப்பாக மரணமாகவே இருக்கும் என்று யேகோவா தேவன் கூறினார் (ஆதியாகமம் 2:17). கீழ்ப்படியாமை அல்லது பாவத்திற்கான தண்டனை ஆதியில் கூறிய அறிவிப்பை வைத்தே முழு வேதாகமும் நிலையாய் நின்று சான்று பகர்கிறது. "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23) என்று பவுல் கூறுகிறார்.

"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதியாகமம் 2:7). முதலில் உருவாக்கப்பட்ட இந்த பரிபூரண ஜோடி மீறின பின்பு, "உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" (ஆதியாகமம் 3:19) என்றார். மண்ணுக்குத் திரும்பும் அனைவரின் நிலைமையைக்குறித்தும் தாவீது வலுவாக அறிக்கையிடுகையில், "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்" (சங்கீதம் 146:4).

எவ்வளவுதான் விஞ்ஞானத்தைக்கொண்டு நம் வாழ்நாளை நீட்டித்தாலும், இறுதியான நிகழ்வை யாராலும் தடுத்து நிறுத்த இயலாது. இறந்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றின வேதாகமத்தின் வாக்குத்தத்தம் மட்டுமே முடிவில்லாமல் வாழ மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையைத் தருகிறது. "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16). ஆதாம் மற்றும் ஏவாளின் மேல் விழுந்த மரண தண்டனை தொடர்ந்து முழு மனுக்குலத்தின்மேல் நீடித்திருந்தாலும், தெய்வீக அன்பு இயேசுவின் வழியாக மனிதனுக்கு மீட்கும் பொருளைத்தந்தது. இவரே மீட்பராகவும் இந்த உலகத்தின் இரட்சகருமாக வந்தார்.

இந்த உயிர்த்தெழுதல் நடைபெறும்போது, இனி மரணம் ஒருபோதும் நடைபெறாது என்று விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களின் உயிர்த்தெழுதலின் விவரங்களைப்பற்றி, அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு யோசனைத் தருகிறார். "அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும், அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம்" (1 கொரிந்தியர் 15:53-56).

தெய்வீக ஜீவிகளாக கிறிஸ்துவோடு பரலோகத்தில் வாழ்ந்து, ஆட்சிசெய்யக்கூடியவர்களைத் தெரிந்தெடுத்து ஆயத்தம் செய்யப்படுவதே தெய்வீக திட்டத்தில் இக்காலத்துக்குரிய வேலையாகும். இந்த வேலை நிறைவடையும்போது, மனுக்குலத்திற்குக் கொடுத்தப் பொதுவான வாக்குத்தத்தங்கள் நிறைவேறத் துவங்கும். கிறிஸ்துவின் இராஜ்யத்தின் தொடர்பின் வழியாக முழு மனுக்குலத்தின்மேலும் ஆசீர்வாதங்கள் ஊற்றப்படும்.

மரணம் அழிக்கப்பட்டு, எல்லாருடைய கண்ணீரும் துடைக்கப்படக்கூடிய ஆசீர்வாதத்தின் காலத்தைப்பற்றி ஏசாயா 25:6-9 மற்றும் வெளிப்படுத்தல் 21:3, 4 வசனங்கள் விவரிக்கிறது. இதுவே கிறிஸ்தவ இராஜ்யத்தின் காலம். மரணம் அழிக்கப்படும்வரையில் இந்த இராஜ்யம் ஆட்சியில் இருக்கும். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் முழுமையாக நிறைவுபெறும்போது, இந்த முழு பூமியும் சமாதானமும், மகிழ்ச்சியும், ஜீவனுள்ள பரந்து விரிந்த பரதீசாக இருக்கும். அப்போது, "கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்" (ஏசாயா 35:10). அப்போது முடிவில்லா ஜீவனுக்குரிய விருப்பம், மனித பிள்ளைகளுக்காக தேவன் சிருஷ்டித்த பூமிக்குரிய வீட்டில் உணரப்படும்.